வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

08.02.2021 திங்கட்கிழமை




# பொலிகண்டியில் பேரணி நிறைவு! பல்லாயிரம் மக்கள் அணி திரள்வு!!

## தடைகள் தகரத்து தமது அபிலாஷைகளை உலகுக்கு உரத்துச் சொன்னது தமிழினம்



வடமராட்சி, பெப்ரவரி 08
பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆதரவளிக்க பொத்துவிலில் ஆரம்பித்த பேரணி பொலிகண்டியில் நேற்றிரவு நிறைவடைந்தது. 02

## "இனப்படுகொலைக்கு நீதி; "தமிழர் தேசத்திற்கு அங்கீகாரம்"

பிரகடன உரையில் வலியுத்து



வடமராட்சி, பெப். 08
தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல்வெளியை ஒடுக்குவதில் சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கம் குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறை 02

## முள்ளிவாய்க்கால் மண்: பல்கலை. மாணவர்களிடம்!

யாழ்ப்பாணம், பெப். 08
முள்ளிவாய்க்காலில் சேகரிக்கப்பட்ட மண்ணை யாழ். பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளிடம் கையளித்தனர் போராட்டக்காரர்கள்.
பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான போராட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்ப 02

## பேரணி நிறைவிடத்தில் இறுதிநேரத்தில் குழப்பம்!

வடமராட்சி, பெப். 08
பொத்துவிலில் ஆரம்பித்த பேரணி பொலிகண்டியில் நேற்று நிறைவடைந்தது. இதன்போது இரு இடங்களில் போராட்டம் முடிவடைந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், தமிழ் சிவில் அமைப்புகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்னோர் இடத்திலும் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வர முயன்றனர். இதனால், போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

நடந்தது என்ன?

எனினும், இறுதியில் இரு சாராரும் திட்டமிட்ட இடமான பொலிகண்டி ஆலடியில் போராட்டம் நிறைவுக்கு வந்ததுடன் பிரகடன உரையும் வாசிக்கப்பட்டது.
இது குறித்து மேலும் விரிவாக தெரிய 02

## ரயிலுடன் விபத்து: ஆசிரியர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 08
பாதுகாப்பற்ற புகையிரத் கடவையை மோட்டார் சைக்கிளில் கடந்தபோது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் -அரியாலை நாவலடி பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் இடம்பெற்ற இந்த விபத்தில், அந்த இடத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் பாலரூபன் (வயது 42) என்பவரே உயிரிழந் 02

## வடக்கில் நேற்று 21 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 08
வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தின் நேற்றைய கொரோனா நில வரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட 02

## தொற்றால் நேற்று ஐவர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 08
கொரோனா தொற்றால் 4 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 356 ஆக அதிகரித்துள்ளது.
இவ்வாறு உயிரிழந்தவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. 02

## ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு இலங்கையிலும் ஆதரவாளர்கள்!

ஐ.நா. அறிக்கையில் தகவல்

கொழும்பு, பெப். 08
ஐ.எஸ். அமைப்பை பின்பற்றுபவர்கள் இலங்கையில் இருக்கிறார்கள் என்று ஐ.நாவின் அறிக்கை ஒன்றில் தெரிய வந்துள்ளது.
கடந்த ஆண்டு 3 மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட எல்லை தாண்டிய தாக்குதல்களுக்கு பொறுப்பான பயங்கரவாத குழு தெஹ்ரி - இல் தலிபான் பாகிஸ்தான் என்ற ஐ.நாவின் அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.
தெற்காசியாவில் 02

மனித உரிமைகள் மீறல் தொடர்பான

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராக சிவஞானசோதி



கொழும்பு, பெப். 08
சுயாதீன மனித உரிமைகள் மீறல் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் செயலாளராக வே.சிவஞானசோதிஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னர் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான 02

## பொலிகண்டியில்...

தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும், தமிழர்களுக்கு நீதி கோரியும், முஸ்லிம்களின் ஜனஸாக்கள் எரிப்பை கண்டித்தும் - அவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அம்பாறை மாவட்டம் பொத்துவிலில் கடந்த 3 ஆம் திகதி பேரணி ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்தின் பொலிகண்டி நோக்கி ஆரம்பமான இந்தப் போராட்டத்திற்கு சிவில் அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புக்கள் இணைந்து அழைப்பு விடுத்திருந்தன.

போராட்டம் ஆரம்பமாகும் முன்னரே இந்தப் பேரணிக்கு நீதிமன்ற தடை பெற்று பொலிஸார் அவற்றைத் தடுக்க முனைந்தனர். ஆனால், உத்தரவுகளையும் புறக்கணித்து போராட்டம் ஆரம்பமானது.

முதல் நாள் பேரணி மட்டக்களப்பு தாழங்குடாவில் நிறைவடைந்தது. இரண்டாம் நாள் அங்கிருந்து தொடங்கிய பேரணி திருகோணமலையில் நிறைவடைந்தது. மூன்றாம் நாள் திருமலையில் தொடங்கிய பேரணி முல்லைத்தீவை அடைந்தது. அங்கு இலங்கை இராணுவத்தால் தமிழின அழிப்பு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மண்ணில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்த பேரணி வவுனியாவில் நிறைவடைந்தது.

நான்காவது நாளாக பேரணி வவுனியாவில் ஆரம்பித்து மன்னாரை நோக்கி நகர்ந்தது. அங்கிருந்து ஏ- 32 பாதை வழியே கிளிநொச்சியை வந்தடைந்தது. ஐந்தாம் நாளான நேற்றுக் காலை அங்கிருந்து நகரத் தொடங்கிய பேரணி யாழ்ப்பாணத்தை அடைந்தது. முகமாலையில் யாழ். மக்கள் பெரும் எடுப்பிலான ஆதரவை வழங்கினர்.

பெருந்திரள் கூட்டத்துடன் ஏ-9 நெடுஞ்சாலை வழியே தொடர்ந்து நகர்ந்த பேரணி யாழ். நகரில் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியது. தொடர்ந்து நகர்ந்து யாழ்.பல்கலைக்கழகத்துக்கு நகர்ந்தது.

பின்னர், அங்கிருந்து நல்லூரை நோக்கிப் பயணமான பேரணி, பிற்பகல் 3.30 மணியளவில் நல்லூரை அடைந்தது. அங்கு தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியது. தொடர்ந்து யாழ்ப்பாணம் -பருத்தித்துறை பிரதான வீதி ஊடாக பேரணி பருத்தித்துறை நகர் நோக்கிப் பயணித்த போது கோப்பாய், நெல்லியடி ஆகிய நகரங்களில் திரண்ட மக்கள் தமது ஆதரவை நல்கினர்.

பருத்தித்துறை நகரிலிருந்து, பருத்தித்துறை பொன்னாலை வீதியூடாக பொலிகண்டியை ஆலடியில் நிறைவடைந்தது.

பொத்துவிலில் பேரணி நகரத் தொடங்கியது முதல் தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைவரும் தமிழ் பேசும் மக்களாக ஒன்றிணைந்து போராட்டக்காரர்களை வரவேற்றனர் - ஆதரவளித்தனர்.

## முள்ளிவாய்க்கால்...

மானது. இந்தப் பேரணி நேற்றுமுன்தினம் இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மண்ணை அடைந்தது.

தமிழின அழிப்பு மேற்கொள்ளப்பட்ட அங்கிருந்து மண்ணை சேகரித்தனர். தொடர்ந்து நகர்ந்த பேரணி நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தை அடைந்து பிற்பகல்வேளை யாழ். பல்கலைக்கழகத்தை அடைந்தது.

யாழ். பல்கலைக்கழக முன்றலை அடைந்தபோது அங்கு கூடிநின்ற மக்கள் எழுச்சிக் கோஷங்களை எழுப்பினர். பின்னர், பேரணி ஏற்பாட்டாளர்களில் ஒரு பகுதியினரான வேலன் சுவாமி, அருட்தந்தை லியோ ஆகியோர் தாங்கள் சேகரித்த முள்ளிவாய்க்கால் மண்ணை யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் சேர்ப்பிப்பதற்காவே இந்த மண் அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டது. (ஐ)

இந்தப்பேரணியில் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட மதத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர். (ஐ - எ-02)

## ரயிலுடன்...

தவராவார். இவர், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியர் என்றும் தெரியவருகின்றது.

நேற்றைய தினம் தனது வயலில் நெல் வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ)

## இனப்படுகொலை...

கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் மக்கள் பேரெழுச்சி பேரணியின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் மத குருமார்களின் ஆதரவுடன் பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி பொலிகண்டியில் நேற்று நிறைவடைந்தது. இதன்போதே மேற்படி பிரகடனம் வெளியிடப்பட்டது.

அந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியையும் தமிழர் தேசத்திற்கான அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும். தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலை மீண்டும் நிகழாது இருப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தமக்கான நிரந்தர அரசியல் தீர்வை வெளிப்படுத்துவதற்கான சர்வதேசத்தால் நடத்தி கண்காணிக்கப்படும் பொதுசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும். தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படும் சிங்கள அதிகாரிகளின் நியமனங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இஸ்லாமிய மக்களின் அடிப்படை மத உரிமை மதிக்கப்பட வேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1000 ரூபா வழங்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்த பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-எ-2)

## ஜனாதிபதி...

ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து அரசாங்க கொள்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளல் இந்த ஆணைக் குழுவின் நோக்கமாகும்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளராக கடமையாற்றிய சிரேஷ்ட அரச அலுவலர் வே.சிவஞானசோதி, இந்த ஆணைக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் மூன்று உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பேரணி நிறை...

வருவதாவது,

திருமலையில் தொடங்கிய முறுகல்

பொத்துவிலில் தொடங்கிய பேரணி திருகோணமலையை வந்தடைந்தது. அங்கிருந்து பேரணி திருகோணமலை நோக்கி நகர ஆரம்பித்தது. முன்வரிசையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் முன்வரிசையில் சென்றனர். இதில் குழப்பம் ஏற்பட, பின்னர் ஏற்பாட்டாளர்களான சிவில் சமூகத்தினரும் முன்வரிசையில் சேர்ந்து நடக்க ஆரம்பித்தனர். எனினும், பிற அரசியல் கட்சிகள் பங்கேற்கும்போது பிரச்னை எழலாம் என்பதால் அவர்களை பின்னுக்குத் தள்ளும் முயற்சி அரங்கேறியது. இதனால் குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதற்கு முன்னதாக, திருகோணமலை நகரில் போராட்டம் நகர்ந்தபோது இதற்கு ஆதரவளிக்க காத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நின்றிருந்த பக்கம் பேரணியை நகர்த்தி சென்று சந்தித்தாலும் முரண்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து, பேரணி இரண்டாகப் பிரிந்து சுமந்திரன், சாணக்கியன் தலைமையில் முல்லைத்தீவு நோக்கி செல்லத் தலைப்பட்டனர்.

இதேபோல், கிளிநொச்சியிலும் அரசியல்வாதிகளுக்கும் மதத் தலைவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

பேரணி சாவகச்சேரியை அடைந்த போது, அங்கு ஓரிடத்தில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது. இதனை முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரான சயந்தன் ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது போராட்டக்காரர்கள் தீபம் ஏற்றினர். அச்சமயம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

அங்கு வந்த விக்னேஸ்வரனை சயந்தன் தீபம் ஏற்றுவதற்கு வருமாறு அழைத்துச் செல்லவே, அங்கு நின்ற பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதிக்கவில்லை. இதையடுத்து சயந்தனுக்கும் மாணவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து தர்க்கிக்க வேண்டாம் என்று கூறிய விக்னேஸ்வரன் அவ்விடத்தை விட்டு வெளியேறினார். ஆனால், இரு சாரரும் கைகலப்பில் ஈடுபடவே மதத் தலைவர்கள் பேரணியை நகர்த்தி சென்று கைகலப்பு பெரிதாவதை தவிர்த்தனர். இதன்போது தந்தை செல்வாவின் பேரனான ச. இளங்கோ மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வந்தது.

இறுதியில் பேரணி பொலிகண்டியை அண்மித்தது. அங்கு பெரும் குழப்பம் வெடித்தது. ஆலடி பகுதியில் பிரகடன உரையை வாசித்து போராட்டத்தை நிறைவு செய்வது என்றும், செம்மீன் படிப்பகம் பகுதியில் அடிக்கல் நாட்டி நினைவுச் சின்னம் அமைப்பது என்றும் முன்னர் திட்டமிடப்பட்டது.

ஆனால், ஆலடிப் பகுதியில் சுமந்திரன் தலைமையில் சாணக்கியனால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் நினைவாக கல் ஒன்று நாட்டப்பட்டது. இதையடுத்து அப்பகுதியில் மாணவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்தது. இதன்போது, “பொத்துவிலில் போராட்டத்தை தொடங்கியவன் நானே, எனவே முடித்துவைப்பதும் நானே தான்”, என்று சாணக்கியன் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

இந்தக் குழப்பத்தால் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அங்கிருந்து தமது வாகனத்தில் வெளியேறினர்.

பொலிகண்டியின் முக்கியபகுதியில் ஆலடி காணப்படுவதால் அங்கே தானே நிகழ்வினை முடிக்கவேண்டும் என்று அந்தக் கிராமத்தின் மக்களில் பலர் கேள்வி எழுப்பினர். (செம்மீன் படிப்பகம் பொலிகண்டியின் மேற்குப் பகுதியில் எல்லைப் பகுதியில் காணப்படுகிறது) அதையே மக்கள் மத்தியில் சுமந்திரனும் தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில் செம்மீன்படிப்பக பகுதியை தேர்ந்தெடுத்தமைக்கான காரணத்தினை போராட்ட ஏற்பாட்டுக்குழு மக்களுக்கு விளக்கியிருக்கிறது.

பேரணி ஏற்பாட்டுக்குழு இடம் தெரிவு செய்தமைக்கான காரணம் என்ன?

1985 ஆம் ஆண்டு மே மாதம் பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் 55 பேர் பிடிக்கப்பட்டு பொலிகண்டியில் உள்ள செம்மீன்படிப்பகத்தில் அடைக்கப்பட்டு அங்கு குண்டுவைத்துக் கொல்லப்பட்டதாகவும் அதனால் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர்கள் உயிரிழந்ததாக சொல்லப்படும் இடத்தில் போராட்டத்தினை நிறைவுசெய்வது தானே பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்து அந்த இடத்திலேயே மாவீரர் ஒருவரின் தாயார் சுடரேற்றிய பின்னர் நினைவுத்தூபிக்கான கல் நாட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து அங்கு பிரகடன உரை வாசிக்கப்பட்டது. (ஐ - 02)

## தொற்றால்...

இந்நிலையில் நேற்று மாலை வரை 772 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

அதற்கமைய நாட்டில் மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 68 938 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கமைய 11 மாவட்டங்களில் 51 பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கில்...

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வு கூடத்தில் நேற்று 403 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதன் முடிவுகளின் அடிப்படையில், மன்னார் மாவட்டத்தில் 11 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 பேருக்குமாக 14 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது- என்றார்.

## ஐ.எஸ்...

இணைவழி மூலமாக ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றது. இந்த அமைப்பை இலங்கை மற்றும் மாலைதீவில் பின்பற்றுபவர்கள் உள்ளனர் என்று வொய்ஸ் ஒவ் ஹின்ட்ஸ் என்ற பிராந்திய ஆங்கில இதழிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மாலைதீவில் செயல்படும் ஐ.எஸ்.ஐ.எல். என்ற அமைப்பு ஐ.ஸ். ஐ.எஸ். அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை வளர்க்க முயற்சிக்கிறது என்றும் ஐ.நாவின் அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

அல் முஹாஜிர் என்ற ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஐ.எஸ். அமைப்பின் தளபதியே, இலங்கை, இந்தியா, மாலைதீவுகள், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளுக்கான ஐ.எஸ். அமைப்பின் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## பொத்துவில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழியில் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் கூர்மையடையும் என்பதும் உணர்த்தப் பட்டிருக்கிறது.

இதுதவிர, துரதிர்ஷ்டவசமான கடந்தகால சம்பவங்களால் வடக்கு - கிழக்கில் பிளவுற்றிருந்த தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான உறவு, மீளவும் சிறுபான்மையினருக்கான நீதியை நிலைநாட்ட இப்பேரணியின் மூலம் உயிர்பெற்றுள்ளது என்ற செய்தியும் வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆட்சியாளர்கள் பொத்துவில் முதல் பொலிகண்டிவரை இடம்பெற்ற பேரணி மூலம் விடுக்கப்பட்டுள்ள செய்தியை ஜனநாயக ரீதியில் கையாண்டு, மேலும் தாமதங்களுக்கு இடந்தராது வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதோடு, அவர்களது போருக்குப் பின்னரான மனிதாபிமானப் பிரச்னைகளை தீர்ப்பதே தகுந்த அணுகுமுறையாக இருக்கமுடியும்.

ஈழநாடு
Eelanadu
08.02.2021 திங்கட்கிழமை
சார்வரி, தை 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சிங்கள - பௌத்த வாதம்

வடக்கு, கிழக்கில் இருக்கும் இந்து ஆலயங்களில் 99 வீதமானவை பௌத்தர்களின் வழிபாட்டு ஸ்தலங்களே, அவற்றை இடித்துவிட்டே, இந்து ஆலயங்கள் நிறுவப்பட்டுள்ளன - இவ்வாறு எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் தொல்பொருள் செயலணியில் முக்கிய பங்கு வகிக்கும் எல்லால மேதானந்த தேரர், வடக்கு, கிழக்கை பௌத்தர்களுக்குரிய இடமென்று, தொடர்ந்தும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறானவர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அரசாங்கமும் செயல்பட்டு வருகின்றது.

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவான எல்லாவல மேதானந்த தேரர், ஒரு தடவை பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார். இலங்கையின் தொல்பொருள் மற்றும் வரலாறு தொடர்பில் 40 நூல்களை எழுதியிருக்கும் தேரர், 2003இல் வடக்கு, கிழக்கில் சிங்கள - பௌத்த பாரம்பரியம் தொடர்பிலும் (Sinhala-Buddhist Heritage in the Northern and Eastern Provinces) நூலொன்றை எழுதியிருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவான பின்னர், தனது கருத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதில் தீவிரம் காண்பித்து வருகின்றார். வடக்கு, கிழக்கில் ஆய்வுகளை மேற்கொண்டு பௌத்த மேன்மையை உறுதிப்படுத்த வேண்டுமென்று தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இவரையும் உள்ளடக்கி குறித்த ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டிருக்கின்றது.

வரலாற்று ரீதியாக நோக்கும் போது வடக்கு கிழக்கில் பூர்விகமாக வாழ்ந்துவந்த தமிழ் மக்களில் ஒரு பகுதியினர், மிகவும் ஆரம்ப காலங்களில் பௌத்தத்தை பின்பற்றியிருப்பதற்கான சான்றுகள் இருப்பதாகவே தொல்பொருள் நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த பின்புலத்திலேயே தமிழ் பௌத்தம் தொடர்பில் பேசப்படுகின்றது. ஆனால், காலப்போக்கில் தமிழ் மக்கள் முற்றிலுமாக இந்து மற்றும் சைவ சமயத்தை தழுவிக் கொண்டனர். காலனித்துவ காலத்தில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்தை தழுவிக் கொண்டனர்.

ஆனால், மிகவும் ஆரம்ப காலத்திற்கு செல்வது தொடர்பிலேயே குறித்த தேரர் போன்றவர்கள் சிந்திக்கின்றனர். இவ்வாறான தீவிர வலுதுசாரி நிலையிலான சிங்கள பெருந்தேசியவாதிகளுக்கு தற்போதைய அரசாங்கமும் வெளிப்படையாக ஆதரவு வழங்கிவருகின்றது. ஜனாதிபதி தன்னை மிகவும் வெளிப்படையாகவே, சிங்கள - பௌத்த தலைவனாக அடையாளப்படுத்துவதால், இவ்வாறான அதிதீவிர பௌத்த தேசியவாதிகள் உற்சாகமடைந்திருக்கின்றனர். உண்மையில், சிங்கள மக்கள் மத்தியில், வரலாற்றில் பின்நோக்கி சிந்திக்கும் தேசியவாத தரப்பினர் மிகவும் சிறுபான்மையினர்தான். ஆனால், இவ்வாறான மிகச்சிறிய கூட்டத்தினரே இறுதியில் ஆட்சியாளர்களை கட்டுப்படுத்துகின்றனர். இவர்களது விருப்பங்களுக்கு அமைவாகவே ஆட்சியாளர்கள் செயலாற்றுகின்றனர்.

வரலாற்றில் பின்நோக்கி சிந்திப்பதென்பது ஒரு மிகவும் தீவிர நிலைப்பட்ட தேசியவாத நிலையாகும். இவ்வாறான தரப்பினர் ஒரு சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துவார்களாயின், அங்கு சகவாழ்விற்கான அனைத்து கதவுகளும் மூடப்பட்டுவிடும். இன வெறுப்பும் மத வெறுப்புமே அரசியலை ஆக்கிரமிக்கும். இலங்கை தற்போது, அவ்வாறானதொரு நிலைமையை நோக்கியே நகர்கின்றதா? இது மிகவும் ஆபத்தானது. இவ்வாறான நிலைமை ஒரு பெருமெடுப்பிலான அரசியல் போக்காக மாறுமாயின், ஒரு கட்டத்தில் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் கூட, பேராபத்தாக மாறலாம். இவ்வாறான நிலைமையை எதிர்கொள்வதற்கு தமிழ் தரப்புக்கள் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள தாராளவாத போக்குள்ள தரப்புக்களுடன் கைகோக்கவேண்டும். இதனை வழமையான தமிழ் அரசியல் அணுகுமுறைகளால் மட்டும் எதிர்கொள்ள முடியாது.

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரணி:

# 'ஓயாத அலையாக' சாத்வீக போராட்டம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அரசியல் ரீதியான உரிமைப் போராட்டம் "ஓயாத அலையாக" தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதைப் பறைசாற்றுவதாகவே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி (P 2 P) வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது.

2009ஆம் ஆண்டு மூன்று தசாப்தகால ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களது உரிமைகளுக்கான போராட்டம் முழுமையாக நசுக்கப்பட்டு விட்டதென்ற அபிப்பிராயமே நிலவி வந்திருந்தது. ஆனால், வடக்கு-கிழக்கு மக்களின் உரிமைகளுக்கான போராட்டம், அவர்களின் அபிலாஷைகள் நிறைவேறும்வரை ஒடுக்கப்பட முடியாதது என்பதை இடித்துரைப்பதாகவே பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான பேரணி எடுத்தியம்பியிருக்கிறது.

இந்தப் பேரணி பல குறிப்பிடத்தக்க அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இலங்கையில் ஆன்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பேரணிகள், ஊர்வலங்கள் இடம்பெறுவது வழக்கமாகும். ஆனால், அரசியல் ரீதியாக ஒரு நீண்ட பேரணி கால்நடையாகவும், வாகனங்கள் மூலமாகவும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கோரியும், மனிதாபிமான பிரச்னைகளுக்கு நீதி வேண்டியும் நடத்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

**முஸ்லிம்களின் ஆதரவு**

ஆயிரக்கணக்கானவர்கள் உணர்வுபூர்வமான முறையில் பங்குபற்றிய இந்த மாபெரும் பேரணியில் முஸ்லிம் மக்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகவே விளங்கியிருந்தது. எனவே, இலங்கையில் சிறுபான்மை இன மக்கள் எவ்வளவு தூரம் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதற்கு பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இடம்பெற்ற பேரணியில் ஓங்கி ஒலித்த கோஷங்கள் நன்கு எடுத்தியம்பியிருந்தன.

இந்த மாபெரும் பேரணியை முன்னின்று வெற்றிகரமாக நடத்திய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவராகின்றார். கிழக்கே பொத்துவில் முதல் வடக்கே பொலிகண்டிவரை நடத்தப்பட்ட பேரணி அடிப்படையில் சாத்வீகமான முறையிலேயே நடத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், பேரணி ஆரம்பித்த நேரம் முதல் நிறைவடையும்வரை பல தடைகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. நீதிமன்ற தடை உத்தரவுகள் விதிக்கப்பட்ட போதிலும் அவற்றையெல்லாம் புறந்தள்ளி, ஆக்ரோஷமான முறையில் எவ்விதமான வன்முறைகளுக்கும் இடம் தராது பேரணியை கிழக்கிலிருந்து வடக்கு வரை நடத்தியமையே குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

**சாணக்கியனின் சாணக்கியம்**

தடைகளை ஏற்படுத்த முற்பட்டவர்கள் வன்முறைகள் ஏற்படுமானால், அச்சமயம் பேரணியை இடைநிறுத்தி அதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்கலாமென்றே கருதியிருந்தனர். ஆனால் பேரணியில் பங்குபற்றியோர் மிகப் புத்திசாலித்தனமாக எவ்வித வன்முறைக்கும் இடம்தராது நடந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இதுவிடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மிக நல்ல முறையில் தமது தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். அத்தோடு, தடைகளை ஏற்படுத்த முற்பட்ட பொலிஸாரையும் நல்ல சாணக்கியத்தொடு கையாண்டதையே அவதானிக்க முடிந்தது.


பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நடத்தப்பட்ட பேரணி என்பது இலங்கையின் ஆட்சியாளருக்கு மட்டுமல்ல. சர்வதேச சமூகத்துக்கும், இந்தியாவுக்கும் வழங்கியுள்ள செய்தி என்னவெனில், ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், சாத்வீக ரீதியிலான போராட்ட உணர்வுகள் தொடர்ந்து உயிர்த்துடிப்புடனிருந்து வருகின்றது என்பதேயாகும்.

**தமிழர் தாயகம்**

இதுதவிர, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதை இடித்துரைப்பதாகவும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி எடுத்துக்காட்டியிருந்தது. சட்ட ரீதியான தடைகள் ஒருபுறமிருக்க, இயற்கையும் இடையிடையே மழைப் பொழிவோடு பேரணியைக் குறுக்கிட்டிருந்தது. ஆனால், மழைப்பொழிவையும் ஒரு பொருட்டாக மதிக்காது பேரணி இடம்பெற்றமை, பேரணியில் பங்குபற்றியோராது மன உறுதியையும் வெளிப்படுத்தியிருந்தது.

வடக்கு - கிழக்கு மக்களது அரசியல் அபிலாஷைகள் குறித்த எதிர்பார்ப்புகளை எக்காலத்திலும் மழுங்கடிக்க முடியாது என்பது மட்டுமல்ல, இனி வருங்காலங்களில் அஹிம்சை (02 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# கமக்காரர் பதிவு

கோப்பாய், பெப். 08

இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கமச்செய்கைகளில் ஈடுபடும் கமக்காரர்களின் விபரங்கள் உரும்பிராய் கமநலசேவைகள் நிலையத்தின் உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இந்தப் பதிவு இடம்பெறவுள்ளது.

இதனால், குடும்ப அட்டைகளுடன் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளும்படி அப்பகுதி கமக்காரர் அமைப்பின் செயலாளர் ந.கஜேந் திரகுமார் கேட்டுள்ளார்.

பெப்ரவரி - 8 திங்கட்கிழமை
சார்வரி வருடம் - தை - 26
சுபமுகூர்த்த நாள்(காலை 6.00 - 7.30)

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 6.00 - 7.30 |
| எமகண்டம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | துவாதசி |




**மேடம்**
துணையாக இருப்பவர்களால் துயரங்கள் வந்துசேரும். விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சிக்கனமாக இருந்தாலும் செலவுகள் ஏற்படலாம்.

**இடபம்**
மனக்குழப்பம் ஏற்படும். திட்டமிட்ட காரியத்தை செயல் படுத்த முடியாது. உத்தியோக மாற்றச் சிந்தனைமேலோங் கும். உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்**
யோகமான நாள். அதிகாலையில் நல்ல தகவல் வரலாம். நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்துமுடிப்பீர்கள். உத்தியோகத்தில் அனுசரித்து செல்வது நல்லது.

**கடகம்**
சொத்துகளால் லாபம் கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தொழிலில் ஏட்டிக்கு போட்டியாக இருந்த வர்கள் இணைவர். அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**சிம்மம்**
தாமதித்த காரியம் தடையின்றி நடைபெறும் நாள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வரவு திருப்தி தரும். முடிவு களை எடுத்து அருகிலிருப்பவர்களை அசரவைப்பீர்கள்.

**கன்னி**
புதிய முயற்சியில் வெற்றி கிட்டும். புத்திசாலித்தன மான செயல்பாடுகளால் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர் கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கலாம்.

**துலாம்**
வளர்ச்சி அதிகரிக்கும் நாள். கல்யாணக் கனவுகள் நனவாகலாம். பணவரவுகள் தாராளமாக வந்து சேரும். ஆலய திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருட்சிகம்**
புகழ் கூடும் நாள். எதிர்கால நலன் கருதி புதிய திட்டங் களை தீட்டுவீர்கள். பெரியமனிதர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதணையாக விளங்குவர். வருமானம் திருப்தி தரும்.

**தனுசு**
கூடப்பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிட்டும் நாள். எதையும் சமாளிக்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வீர்கள். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

**மகரம்**
அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். திட்டமிட்டவேலையொன்றில் மாற்றம் ஏற்படலாம். உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
உற்சாகம் பெருகும் நாள். பிரச்சினையொன்று நல்ல முடி விற்கு வரும். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். விரோதம் விலக விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது.

**மீனம்**
வாழ்க்கைத் தரம் உயரும் நாள். உடல்நலம் சீராகும். ஊக்கத்தோடும் பணிபுரிவீர்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற நண்பர்கள் உறுதுணைபுரிவர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை

# போராட்டத்தை குழப்புவதற்கு சுவரொட்டி, துண்டுபிரசுரங்கள்

## யாழில் வீசியது அநாமதேய குழு

யாழ்ப்பாணம்,பெப்.08

**தமிழ் மக்களின் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரெழுச்சிப் போராட்டத்தை குழப்பும் வகையில் அநாமதேய நபர் களால் யாழ்ப்பாணத்தின் பரவலான இடங்களில் ஒட்டப்பட்டன. அத்துடன் இவை பேரணி பயணிக்கும் வீதிகளிலும் வீசப்பட்டன.**

'கொவிட்-19 தொற்று நோயை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் வேண்டாம்", 'கொவிட் -19ஐ கொண்டுவரும், ரி.என்.ஏ. (தமிழ் தேசியக் கூட் டமைப்பு), ரி.என்.பி.எவ். (தமிழ் தேசிய மக்கள் முன்னணி), ரி.எம்.ரி.கே. (தமிழ் மக்கள் தேசிய கூட்டணி)", போன்ற வாசகங்கள் எழுதப் பட்ட சுவரொட்டிகள் யாழ். நகரம் உள்ளிட்ட பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

இதேபோல, போலி செய்தி கள் அடங்கிய பத்திரிகை செய்தி கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் என்பவையும் கிளிநொச்சி, யாழ்ப் பாணம் உள் ளிட்ட பகுதிகளில் வீசப்பட்டிருந்தன. எனினும், இந்தத் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளை கவனத்தில் கொள்ளாமல் பெருவாரியாக மக்கள் திரண்டு இந்தப் பேரணியில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தெல்லிப்பழை சமுர்த்தி வங்கி கணனி மயம்

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட் பட்ட தெல்லிப்பளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் வாடிக்கையாளர் சேவை கணணி மயப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கான ஆரம்ப நிகழ்வுகள் பிரதேச செயலாளர் ச.சிவஶ்ரீ தலை மையில் சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் ப.திலக சிறியால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. (ஐ)

# இளைஞர் சம்மேளன பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், பெப். 08

சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் பயிற்சி பட்டறை நேற்று இடம்பெற்றுள் ளது. வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் சுஜிதரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதி யாக வலி மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன் கலந்து கொண்டார். அவருடன், சபை உறுப்பினர்களான லங்கேசன் மற்றும் கிருபாகரன் ஆகியோரும் பங்கேற்றனர். இதன்போது மகிழ்ச்சியான வழிகழ் தேடி, தலை மைத்துப் பயிற்சி, நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதி சமா தானம் மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம் மற்றும் அஹிம்சை போன்ற தலைப்புகளில் பயிற்சி கள் இடம்பெற்றன. (ஐ)



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்

# கிளிநொச்சி போராட்டம் ஆனந்தசங்கரியும் ஆதரவு

கிளிநொச்சி, பெப். 08

கிளிநொச்சி மாவட்டத்தில் போராட்டம் நடத்தி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இந்தப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை சந்தித்த ஆனந்தசங்கரி அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்னைகள் தொடர்பிலும், எதிர் காலத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார். (ஐ)

# கிளிநொச்சியை இரு கல்வி வலயங்களாக்க அனுமதி!

கிளிநொச்சி, பெப். 08

கிளிநொச்சி மாவட்டத்தை இரு கல்வி வலயங்களாக பிரிப்பதற்கு ஒருங்கிணைப்பு தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் ஆகியோரின் முன்மொழிவுக்கு கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அனுமதி வழங்கினார்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ அனுமதியை வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸிடம் கிளிநொச்சி அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண கல்வி தொடர்பான விசேட கலந்துரையாடலின்போது பேராசிரியர் பீரிஸ் கையளித்தார். (ஐ)

# டெங்கு, கொரோனாவை கட்டுப்படுத்த யாழில் இராணுவத்தினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 08

டெங்கு மற்றும் கொரோனா தொற்றின் தாக்கத்தை கட்டுப் படுத்தும் நோக்கில் யாழ்ப் பாணம் புகையிரத நிலையத்தில் இராணுவத்தினர் நேற்று சிரம தானப் பணியில் ஈடுபட்டனர். அத்துடன் கொரோனா தொற்றை தடுக்கும் நோக்கில் கிருமி நாசினி விசிறும் நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டனர்

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி பிரியந்த பெரோராவின் பணிப்புரைக்கு அமைய, யாழ். 512வது படைப்பிரிவின் பிரிகே டியர் தலைமையிலான இரா ணுவ அதிகாரிகள் தலைமையில், இராணுவத்தினர் இந்தப் பணி களை முன்னெடுத்தனர். இராணு வத்தினரின் சிரமதான நடவடிக் கைகளை யாழ்ப்பாணம் புகை யிரத அதிபர் பிரதீபன் மற்றும் இரா ணுவ கட்டளை அதிகாரிகளும் மேற்பார்வை செய்தனர். (ஐ)



## ஆயர் இல்லத்தின் காணிகள் 11 குடும்பங்களுக்கு பகிர்வு!

மன்னார், பெப். 08

மன்னார் ஆயர் இல்லத்துக்கு சொந்தமான காணியில் வசித்து வந்த 11 குடும்பங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமலந்தான் கிராமத்தை சேர்ந்த குடும்பங்களுக்கே இவ்வாறு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஆயர் இல்லத்துக்கு சொந்தமான காணியில் வசித்து வந்த 11 குடும்பங்களுக்கே இந்தக் காணித் துண்டுங்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. ஆயர் இல்லத்தின் முடிவுக்கு அமைய மன்னார் மாவட்ட சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் உதவியுடன் குறித்த காணிகளுக்கான உறுதி எழுதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உரிய குடும்பங்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் அருட்தந்தை வி.றொசான் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இமானுவேல்பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல், மடு உதவி பிரதேசச் செயலாளர் திருமதி வினோஜிதா, மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் குழுமத் தலைவர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



## உழுந்து பயிர் செய்கையில் புதுவித நோய்த் தாக்கம்!

### வவுனியா விவசாயிகள் கவலை

வவுனியா, பெப். 08

வவுனியாவில் புதுவித நோய் தாக்கத்தால் உழுந்து செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த வருட இறுதியில் 15 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் உழுந்து செய்கை முன்னெடுக்கப்பட்டது. தற்போது அறுவடைக் காலத்தை நெருங்கும் நிலையில் உழுந்தின் இலைகளில நோய்தாக்கம் பீடித்துள்ளது. இதனால், இலைகள் மஞ்சள் நிறமாக காட்சியளிக்கிறது.

மரத்தில் காய்பிடிக்கும் நேரத்தில் இவ்வாறு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளமையால் விளைச்சலில் பெரும் பின்னடைவு ஏற்படும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடன்பட்டே தமது பயிர் செய்கை நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் தற்போது அறுவடைக் காலத்தில் ஏற்பட்டுள்ள நோய்தாக்கம் காரணமாக உற்பத்திசெலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் வருமான இழப்பை சந்திக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டனர்.

இதேவேளை, ஒருகிலோ உழுந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவரும் நிலையில், தற்போது அறுவடை செய்யும் உழுந்தை சில இடைத்தரகர்கள் கிலோவிற்கு 350 ரூபாயை மாத்திரம் வழங்கி கொள்வனவுசெய்து அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் ஈட்டும் செயலும் இடம்பெற்று வருகின்றது.

எனவே, பல்வேறு கஷ்டத்திற்கு மத்தியில் உழுந்தை விதைத்துள்ள நாம் அதன் உற்பத்தி செலவையும் ஈடுசெய்யும் படியாக அதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இடைத்தரகர்கள் தமது இலாபத்தை மாத்திரம் பார்க்காமல் நியாயமான விலையையும் வழங்கவேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

# விளைநிலங்களை அதிகரிக்கும் செயல்திட்டம் விரைவில் வரும்

### ஆளுநர் வவுனியாவில் உறுதி



வவுனியா, பெப். 08

**நீர்ப் பாசன திட்டங்களை ஏற்படுத்தி விளைநிலங்களை அதிகரிக்கும் பல்வேறு செயல்திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்தார்.**

வவுனியாவிற்கு நேற்றுமுன்தினம் சென்ற அவர் குளப் புனரமைப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்தபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் தேசிய உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் சிந்தனையின் வெளிப்பாடாக இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடு இது. இதற்கு முதல் அரிசியை பெருமளவில் இறக்குமதி செய்திருந்த நிலமையையும் நாம் கண்டிருக்கிறோம்.

அந்தவகையில் விவசாயப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமே இது. தற்போது மாகாண விவசாய திணைக்களத்திலே ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எமக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதனை செய்துவருகிறோம். இதன் மூலம் விவசாய திணைக்களத்தின் சேவைகள் மேலும் மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதேவேளை, விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்காக பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிற்கு 2 கோடி ரூபாவை விடுவித்துள்ளேன். அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்காக 4 வீத வட்டியில், பணத்தை விடுவிப்பதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் வடக்கிலே அதனை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நீர்பாசனம் மட்டுமல்லாமால் விவசாயம், விவசாயப்பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக மாகாண நிர்வாகமும் மத்திய அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறோம். மேலதிகமாக நீர்தேக்க திட்டங்களை அமைப்பதற்கும் அதனூடாக குடிநீர் வழங்குதல் மற்றும் விளைநிலங்களை அதிகரிப்பதற்குமான செயல்திட்டங்களையும் மத்திய அரசும் மாகாணசபையும் இணைந்து முன்னெடுக்க இருக்கின்றன. எனவே இவற்றை முழுமையாக பயனபடுத்தி அதன் பயனை அடையவேண்டும் . இதற்கு மாகாண நிர்வாகம் அர்ப்பணிப்புடன் செயல்படும் என்றார். (ஐ)

## "ஐ.தே.கவை கட்டியமைக்க சகலரும் உதவுக"

கொழும்பு, பெப். 08

அடுத்துவரும் பிரதான தேர்தல்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் இணைந்து செயல்படவேண்டும். கட்சியை பலப்படுத்துவதன் மூலம் மாத்திரமே அரசாங்கத்துக்கு சவாலை ஏற்படுத்த முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சி பிரதி தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கம் கொண்டு செல்லும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் தோல்வியே அத்துடன், நாட்டின் பிரதான கட்சியான ஐக்கிய தேசிய கட்சி நாட்டுக்காக பெரும் வேலைத் திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றன. நாடு தற்போது எதிர்க்கொண்டுள்ள நிலையில் இருந்து மீட்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியினால்முடியும். அதற்காக ஐ.தே.க. மீண்டும் கட்டியெழுப்ப நாங்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். பிரிந்து சென்றவர்களுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளோம். - என்றார்.



## தொற்றால் இறந்த மருத்துவருக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி!

வவுனியா, பெப். 08

கொரோனா தொற்றால் உயிரிழந்த நாட்டின் முதல் மருத்துவர் கஜன் தந்தநாராயணவிற்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உயிரிழந்த மருத்துவரின் உருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மருத்துவர், காலி - கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த நிலையிலேயே கடந்தவாரம் உயிரிழந்தார். அவர் ராகமை வைத்தியசாலையில் பணியாற்றிவந்திருந்தார்.

அஞ்சலி நிகழ்வில் அரச அதிபர் சமன் பந்துலசேன, மருத்துவர்களான சுதாகரன், மதுரகன், நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், சிறுவர் நன்நடத்தை அதிகாரி கெனடி,சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (ஐ)



## ஏ-9 சாலையில் விபத்து; இருவர் காயம்

கிளிநொச்சி, பெப். 8

ஏ-9 நெடுஞ்சாலையில் - பரந்தனுக்கு அண்மையாக இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றது. காயமடைந்த இளைஞர்கள் இருவரும் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாடசாலை மட்டத்தில் மக்கள் பாதுகாப்பு குழு

## அமைச்சர் சரத் வீரசேகர



பாடசாலை மட்டத்தில் பொது மக்கள் பாதுகாப்பு குழு அமைக்கப்படுவது பாதுகாப்பான சூழலை உருவாக்க எடுத்துள்ள சிறந்த தீர்மானம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மஹகரமவில் இடம்பெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு குழுவின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபேதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்காகவே பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் அச்சமின்றி பாதுகாப்பான முறையில் வாழும் சூழலை ஏற்படுத்துவது இந்த அமைச்சின் பிரதான இலக்காகும்.

தேசிய பாதுகாப்பில் நாட்டு மக்கள் அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்பதற்காகவே 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்கும் இராணுவ பயிற்சியை வழங்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தேன்.

நாடளாவிய ரீதியில் 44 தொகுதிகளில் பொது மக்கள் பாதுகாப்பு குழு சேவையாற்றும். 117, 118 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து பொது மக்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களை சிறையிலடைப்பதால் அவர்கள் திருந்தி விட மாட்டார்கள். சிறைக்காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் சமூக விரோத செயல்பாடுகளின் ஈடுபடுவார்கள். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 35 ஆயிரம் பேர் தற்போதும் சிறைச்சாலைகளில் உள்ளார்கள்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களை சிறையிலடைக்காமல் இரண்டு வருட காலத்துக்கு கட்டாய புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இறையாண்மை நாடாகவே நிற்போம்

## வெளிவிவகார அமைச்சர் உறுதி



**கண்டி,பெப்.08**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை ஓர் இறையாண்மை கொண்ட நாடாக நிற்க முடியும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.**

கண்டியில் வெளிவிவகார அமைச்சின் அலுவலகம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டபோது உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது மக்கள் நம்பிக்கை வைத்து, இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை பாதுகாக்க அவருக்கு ஆணையை வழங்கியுள்ளனர்.

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் கதைகளை எடுத்துச் செல்லும் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரிக்கும் சில குழுக்கள் இருக்கின்றன எனவும் அமைச்சர் சாடினார்.

முன்னாள் அரசாங்கம் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியது என்றும் அதன்படி இலங்கை நாட்டின் சட்டம் மற்றும் அரசமைப்பின்படி செயல்படும் எனவும் நாட்டின் மக்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளாதாகவும் அவர் சொன்னார்.

அனைத்து நாடுகளும் இறையாண்மை கொண்டவை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதுடன், மற்ற நட்பு நாடுகளிற்கு இலங்கையின் நிலை பற்றி அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

(ஐ)

# மாகாண சபை தேர்தலை பிற்போடும் தேவை அரசாங்கத்துக்கு கிடையாது!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



கொழும்பு, பெப். 08

மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடை யாது. கொவிட்-19 வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்ட பின்னர் பொதுத் தேர்தலை நடத்தியதை போன்று பாதுகாப்பான முறையில் மாகாண சபை தேர்தலையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சியினரும், அரச சார்பற்ற அமைப்புக்களும் கூட்டணியமைத்து அரசாங்கத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொள்கை அடிப்படையில் ஆட்சியமைத்துள்ளார். ஆகவே, வெறுப்பு பேச்சுக்களினால் அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது.

மக்களின் ஜனநாயக உரிமைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. மார்ச் மாதம் மாகாண சபை தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. மார்ச் மாதம் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த அமைச்சரவை மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. எதிர்பாராத வகையில் கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் சுற்று தீவிரமடைந்தமையால் தேர்தலை தற்காலிகமாக பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதை காட்டிலும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது முக்கியமானதொன்றாக கருதப்பட்டது - என்றார். (ஐ)

# மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையை நாம் ஏற்கவில்லை!

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அறிவிப்பு

கொழும்பு, பெப். 08

ஐ.நா மனித உரிமைகள் கவுனஸிலின் இலங்கை தொடர்பான அறிக்கையை தாமும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச இதனை தெரிவித்தார்.

போர் குற்றச்சாட்டு, மனித உரிமைகள் மீறல், மற்றும் உண்மைகளை கண்டறி வதற்கு சர்வதேச பொறிமுறையை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியை தாம் கண்டிக்கிறார் என்றும் அவர் கூறினார்.

மேலும், ஈராக், ஈரானில் அமெரிக்க மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை, அந்த நாட்டின் சக்தி காரணமாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கவனிக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார். (ஐ)

# எல்.கே. அடையாளப்படுத்தப்பட்ட இணையதளங்கள் முடக்கப்பட்டன!

கொழும்பு, பெப். 08

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்.கே. என்று அடையாளப்படுத்தப்பட்ட இணையத்தளங்கள் நேற்று முடக்கப்பட்டன. எனினும் சில மணிநேர இடைவெளியில் இவை மீண்டும் வழமைக்கு திரும்பின.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்கள் சில நேற்று அதிகாலை முதல் ஹக்கர்களால் முடக்கப்பட்டது.

இணைய முகவரியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, இந்த இணையங்கள் முடக்கப்பட்டன என்று இணைய முகவரி பதிவாளர் கிஹான் டயஸ் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, செயலிழந்துள்ள இணையத்தளங்களை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சில மணி நேர இடைவெளியில் அவை வழமைக்கு திரும்பின என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மரண அறிவித்தல்

(இயேசு) “என்னைத் தேடுபவன் என்னை கண்டடைவான்”

## திருமதி எமில்டா ஜோசப்பின் ஜெயசீலன்



மலர்வு :- 12.12.1963

உதிர்வு :- 31.01.2021

இராமநாதன் கல்லூரி, பழைய மாணவியும், ஆசிரியரும் யாழ்.உடுவிலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட எமில்டா ஜோசப் பின் அவர்கள் (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்வம், மேரி திரேசா அவர் களின் அன்பு மகளும் காலம்சென்றவர்களான பிரான்சிஸ் பிலோமினா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெயசீலனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், அனோ ஜெயனின் அன்புத் தாயா ரும், எமில்ஜோன், எமில்ரன் (கனடா), எரிக், ஏனெஸ்ட் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகா, றேணுகா ஆகியோரின் மைத்துனி யும் ஆவார்.

இன்று (08.02.2021) திங்கட்கிழமை ஜேர்மனியின் 12 மணிக்கு நடைபெறும். இறுதி நிகழ்வு அதே நேரம் இங்கு அவரது இல்லத்தில் 4.30 மணிக்கு நேரடி ஒளிபரப்பப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: எரிக் (சகோதரன்)**

**ஆக் வீதி, உடுவில். 0773445750**



# இயற்கையில் விளைந்த நெல் அறுவடை விழா!

அம்பாறை, பெப். 07

அம்பாறையில் இயற்கை பாரம்பரிய முறையில் 175 ஏக்கரில் விளைவிக்கப்பட்ட நெல் அறுவடை நேற்று முன்தினம் இடம்பெற்றது. தமிழர் பாரம்பரிய முறைப்படி இந்த நிகழ்வு நடந்தது.

நஞ்சற்ற இயற்கை பாரம்பரிய முறையில் மேற்கொள்ளும் நெல் செய்கையை மக்கள் மத்தியில் ஊக்குவிக்கும் முகமாக ஹெலசுவய நிறுவனமும் தம்பிலுவில் கமநல சேவைத் திணைக்களமும் திருக்கோவில் பிரதேச செயலகமும் இணைந்து மேற்கொண்ட நெற்செய்கை அறுவடை நிகழ்வுகள் சேனைக்காடு வயல் பிரதேசத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் ஹெலசுவய நிறுவனத்தின் இணைப்பாளர் தேவரஜனி ஒருங்கிணைப்பின் இடம்பெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி. எம். எல். பண்டாரநாயக்கா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு நிகழவை சிறப்பித்தனர்.

தொடர்ந்து விநாயகபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆறுமுக கிருபாககர சர்மாவால் சூரிய பகவானுக்கு பூஜைகள் இடம்பெற்றதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் டி. எம். எல். பண்டாரநாயக்கா மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஹெலசுவய நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் வி.கே.சேனநாயக்க ஆகியோரால் சம்பிரதாய ரீதியாக நெல் அறுவடை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ)

# ஆர்பாட்டம் செய்வதால் எந்தப் பயனும் கிட்டாது

## பிள்ளையான் சொல்கிறார்



**மட்டக்களப்பு,பெப்.08**

**‘ஆர்ப்பாட்டம் செய்து சத்தம் போட்டுக் கேட்பதால் எந்தப் பயனும் கிடைக்காது. யதார்த்தமான நடைமுறைகளைப் பின்பற்றும் அரசியல் செய்வதால் மட்டுமே நாம் வேண்டுவதைப் பெறலாம்”, இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிள்ளையான் என அறியப்பட்ட சி.சந்திரகாந்தன் எம்.பி.**

மட்டக்களப்பு - பன்குடாவெளியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், விடுதலைப் புலிகள் கட்சி யதார்த்தமான நடைமுறைக்கு சாத்தியமான அரசியலை முன்வைக்கிறது.

‘நாம், மிகப்பெரும் நம்பிக்கையோடு தனிநாடு உருவாக்கலாம் என போராடிய மக்கள் கூட்டம். இப்போது தோல்வியடைந்துள்ளோம்.

முடிந்தவரை சாத்தியமான விடயத்தை - ஜனநாயக ரீதியாக பக்குவமாக செய்வதே எமது கட்சியின் நிலைப்பாடு. யதார்த்தமான நடைமுறைக்கு சாத்தியமான அரசியலை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி முன்வைக்கின்றது.

வெறுமனே ஆர்ப்பாட்டங்கள் செய்து சத்தம் போட்டுக் கேட்பதால் எதுவும் கிடைத்துவிடாது. அபிவிருத்தி பற்றியே நாம் சிந்திக்க வேண்டும் - என்று அவர் கூறினார். (ஐ)

# வரலாற்றை திரிபுபடுத்துகிறார் எல்லாவல மேதானந்த தேரர்!

## சாடுகிறார் இரா. துரைரத்தினம்

மட்டக்களப்பு, பெப். 08

எல்லாவல மேதானந்த தேரர் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் புனிதத் தலங்கள் பௌத்த மதத்திற்குரியது என்று தெரிவித்த கருத்தை நிராகரிப்பதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “வடக்கு, கிழக்கில் தமிழர்களே வாழவில்லை எனவும், 99 வீதம் பௌத்த விகாரைகளே இருந்ததாகவும் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் புனித தலங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை என்றும் தமிழர்களின் கலாசார ரீதியான வரலாற்றைத் திரிபுபடுத்திக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

‘இப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதி செயலணியில் நியமித்து இலங்கையில் இனங்களுக்குள் பகை முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு வழி சமைக்கும். தமிழர்களை நிம்மதியாக இலங்கையில் வாழ விடாமல் ஒரு பௌத்த மதகுரு தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பது மத குருவிற்கான பண்பாக இருக்க முடியாது.

‘பல இன, மதம், பலமொழி, பல கலாசாரங்களை கொண்ட இந்நாட்டில் தமிழர்களை ஒரு தேசிய இனம் என்று ஏற்றுக் கொண்டு நிர்வாக ரீதியாக வடக்கு, கிழக்கில் தமிழ் மொழியும் அமுலாக்கப்படுவது இப்படிப்பட்ட மதகுருமாருக்குத் தெரியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

‘தமிழர்களின் கலாசார பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற சான்றுகள் உள்ள இடங்களையே திரிபுபடுத்தி மாற்ற முயற்சிப்பது ஆரோக்கியமான விடயங்களல்ல. இவை மட்டுமின்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருபது இடங்களுக்கு மேற்பட்ட புராதான வரலாற்றைக் கொண்ட இடங்களை இராணுவமும் பார்வையிட்டுச் சென்றுள்ளமை நல்ல நோக்கத்திற்கானதல்ல. ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில்கூட பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கான பேச்சுக்களே தென்பட்டன.

‘எனவே, தமிழர்கள் இந்நாட்டின் பிரஜைகள் என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு தமிழர்களும் இலங்கைப் பிரஜைகளாக சம உரிமையுடன் அதிகாரம் உள்ளவர்களாக வாழ்வதற்கு சர்வதேச ரீதியில் வழி வகுக்க வேண்டும். அத்துடன், தமிழர்களின் வரலாற்றைத் திரிபுபடுத்துகின்ற செயல்பாட்டை கைவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்”, என்றுள்ளது.

# கொரோனா தொற்றுக்கு கிழக்கில் 16 பேர் மரணம்

மட்டக்களப்பு, பெப். 08

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றால் நேற்று வரை 16 மரணங்கள் பதிவாகின என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 10 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 பேருமாக இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, ஒலுவில், சம்மாந்துறை, சாய்ந்தமருது, நாவிதன்வெளி, உஹனை, சாய்ந்த மருதுப் பகுதிகளிலேயே இந்த மரணங்கள் பதிவாகின. சாய்ந்த மருது பகுதியில் மட்டும் நால்வர் மரணமாகினர் என்று தெரிய வருகின்றது.

இதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, வவுணதீவு பகுதிகளை சேர்ந்தவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிய வந்துள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# ‘மான்களும் நாய்களும்’ நூல் வெளியீடு

மட்டக்களப்பு, பெப். 08

“கா” பதிப்பகத்தின் ஏற்பாட்டில் கலாநிதி. ஜீவரெத்தினம் கென்னடியின் மான்களும் நாய்களும் நூல் வெளியீடு, மட்டக்களப்பு வை.எம்.சீ. ஏ.மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கலாநிதி. புளோரன்ஸ் பாரதி கென்னடியின் வரவேற்புடனும் “கா” பதிப்பாசிரியர் ச.மணிசேகரன் தலைமையிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நூலை வெளியீட்டு வைத்தார்.

மட்டு. தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி முதற் பிரதியும் சீனித்தம்பி அந்தோனி ஜீவரெத்தினம் சிறப்பு பிரதியை பெற்றுக் கொண்டார். கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்டினா பிரான்சிஸ் நூல் அறிமுகம் செய்துவைக்க ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) த.யுவராஜன் சிறப்புரை ஆற்றினார். (ஐ)

# ஓட்டமாவடியில் 110 பேருக்கு டெங்கு

மட்டக்களப்பு, பெப். 08

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரை 110 பேர் டெங்குநோயினால் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார். நேற்று மாஞ்சோலை மற்றும் பதுரியா நகர் பகுதிகளில் இடம்பெற்ற டெங்கு தரிசிப்பு நிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இக்காலப் பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் இடங்களை சுத்தமின்றி வைத்திருந்த 54 வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன், 15 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் சில வீதிகள் தவிர ஏனைய பகுதிகள் விடுவிக்கப்படும்

## மட்டு. சுகாதார சேவைகள் பணிப்பாளர்

மட்டக்களப்பு, பெப்.

காத்தான்குடி பிரதேசத்தின் ஒரு சில வீதிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான தனிமைப்படுத்தல் உத்தரவை நீக்குவதற்கான பரிந்துரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தப் பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டாலும், அபாய நிலை குறையவில்லை. எனவே பொதுமக்கள் அவதானமாக செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் நேற்று வரை 8,503பேருக்கு கொறொனா தடுப்பூசியேற்பட்டன என்றும் அவர் கூறினார்.

காத்தான்குடிக்கு தனிமைப்படுத்தல் முக்கியம் என்பதை அடையாளப்படுத்துவதற்கு காத்தான்குடி நகரசபை தவிசாளர் முகப்புத்தகம் ஊடாக வழங்கிய தகவலே பெரும் உதவியாக அமைந்ததாகவும் அதன் காரணமாகவே தாங்கள் விரைவாக சோதனைகளை முன்னெடுத்து அப்பகுதிகளை தனிமைப்படுத்தினர் எனவும் இதன்காரணமாக சுகாதார துறையினருக்கு உதவியதற்காக அவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் டெங்கின் தாக்கமும் அதிகரித்து வருவதாகவும் இதன்போது சுட்டிக் காட்டினார். (ஐ)



# சிங்களவர்களும் - சுதந்திரம் குறித்த அவர்களின் அச்சமும்

> சுதந்திரத்திற்கான அச்சம் அநேகமான சந்தர்ப்பத்தில் 'அபேகம' என்ற அடையாளத்தின் கீழ் மறைந்துள்ளதுடன், இந்தப் பாதுகாப் பின்மை குறிப்பாக (ஆனால் முற்றிலுமாகவல்ல) காலனித்துவ காலத்திலிருந்து சிங்கள - பௌத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குறுகிய மற்றும் விரோத நடவடிக்கைகளுக்கு மூல காரணமாக அமைந்துள்ளது.

**20**ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால அடிப்படைவாத பாதுகாவலர்களான அநகாரிக தர்மபால, ஏ. ஈ. குணசேகர மற்றும் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர ஆகிய மூவரும் பழமைவாத தலைவர்களால் "செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததுடன், அவர்களே ஈற்றில் பிரித்தானியர்களிடமிருந்து 'சுதந்திரத்திற்கு' பேச்சு நடத்தினர்.

சிங்களவர்களின் இதயம், ஆன்மா மற்றும் உடலாகவிருந்த 13ஆம் நூற்றாண் டின் ரஜரட்ட கலாசாரத்திலிருந்து விலகி அவர்கள் சுதந்திரத்திற்கு பதிலாக பாதுகாப்பு, மேன்நிலைக்கு பதிலாக நடுத்தர நிலை என்பவற்றுக்கு தங்களை சீரமைத்துக் கொண்டனர். காலனித்துவத்தின் தொடர்ச்சியான அழுத்தங்கள் வெளிப்பட்ட பின்னர் 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண் டுகளில் சிங்களவர்கள் ஒரு சுய தற்காப்புப் பொறிமுறையை உருவாக்கிக் கொண்டனர். நாம் 21ஆம் நூற்றாண்டுக்கு நகரும் பொழுது இந்தப் பொறிமுறை முழுமையான செயற்பாட்டில் இருக்கிறது. இது குறித்து அனைத்து இலங்கையர்களும் சிந்திப்பது மட்டுமன்றி தீவிரமாக மீளாய்வு செய்து கொள்ள வேண்டும்.

இவ்விதமாக, இந்தக் காலப் பகுதியில் ஆன்மீக அல்லது பொருண்மிய ரீதியாக அவர்கள் ஒரு பகுதியளவிலான முன்னேற்றத்தை அடையும் பொழுது அவர்கள் சாதி, மதத்தின் பாதுகாப்பு அல்லது இன அடையாளம் மற்றும் இனவுறவு என்பவற்றுக்கு மீண்டும் பின்செல்வதற்கு முனைந்தனர். மேன்மை மற்றும் சுதந்திரம் நோக்கி மற்றொரு அடி நகர்வது ஒரு தெரிவாக அங்கு அப்பியாசிக்கப்படவில்லை.

சுதந்திரம் என்பது ஓர் அடிப்படை, அது பழமைவாத விழுமியமல்ல. இந்தியாவைப் போலன்றி இலங்கையில் சுதந்திரத்திற்கான கருத்தியல் மதம், சமூகம் மற்றும் அரசியல் போன்றவற்றின் வழமையான எல்லைகளுக்குள் மட்டுப்பட்டுள்ளது. இந்த நாட்டில் சுதந்திரத்திற்கான அடிப்படைப் பாரம்பரியம் இல்லாததன் காரணமாகவே அநகாரிக தர்மபால, ஏ. ஈ. குணசிங்க மற்றும்சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர போன்ற அடிப்படைவாத பாதுகாவலர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பழமைவாத சமூக மதிப்புடைமையால் பின்னுற்ற ஒரு சமுதாயத்தில் அவர்கள் அநேகம் பொருத்தமற்றவர்களே.

1753 இல் துறவற ஒழுங்குமுறை மறுமலர்ச்சியின் வெளிப்படுதல்களில் இதனை நாங்கள் தெளிவாகவே காணமுடியும், அங்கு சியாம் மதபீடத்திற்கான அனுமதி 'உயர் பிறப்பான' கொவி சாதியினருக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, 19ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்கப்பாலுமான நடுத்தர வகுப்பின் தோற்றம், நெருக்கமாகப் பின்னப்பட்ட குடும்பம் மற்றும் சாதிய வட்டத்திற்குள் அவர்களது அடையாளம் மற்றும் செல்வத்தை வரையறுத்துக் கொள்வதற்கு முனைந்தது. 19ஆம் நூற்றாண்டின் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் ஆகிய இரண்டிலுமிருந்தான மத மறுமலர்ச்சியாளர்கள் சாதிப் பிரிவு என தங்களிடையே இருந்த உள்ளகப் புற்றுநோயைக் கவனம் கொள்வதற்கு பெரிதும் தவறினர்.

உண்மையில், சாதி அடுக்கில் அமைந்த சியாம் மற்றும் அமரபுர மதபீடங்களுக்குச் சொந்தமான முன்னணி பௌத்த பிக்குகள் கொவி மற்றும் மூன்று கீழ் நாட்டு சாதிகளுடனான சமூக ஒன்றிணைதலுக்கான மத்திய வகுப்புப் போட்டிக்குள் இழுத்து வரப்பட்டுள்ளனர், அவை ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கெதிராக தங்களது சொந்த மேலாதிக்கத்தை நிரூபிப்பதற்கு புதிய அச்சு ஊடகம் மூலமாகப் போட்டியிடுகின்றன. சிறிய மதபீடமான - 1863 இல் ஸ்தாபிக்கப்பட்ட ராமஞ்ய மதபீடம் மட்டும் அனைத்து சாதி வேறுபாடுகளையும் பகிரங்கமாகத் தவிர்த்தது.

இவ்வாறாக, ஆன்மீக அல்லது பொருண்மை ரீதியாக ஈட்டிய எந்த முன் னேற்றங்களும் குறுகிய வேறுபாடுகளின் அடிப் படையிலேயே உறுதிப் படுத்தப்பட்டன. அதிகாரத்தின் ஒரு நிலையை அடைந்த அந்த ஆட்களை சுதந்திரம் எச்சரித்துவிட்டது என சுதந்திரம் குறித்தான ஓர் அச்சம் அங்கேயிருந்தது. அவர்கள் கண்டுபிடித்த அதிகாரத்தின் மூலங்களுக்கான கதவுகளை அவர்கள் திறந்து விட முடியும். அதனால் அனைத்துச் சமூகங்களும் நன்மையடைவதற்கு முடியும். அல்லது அவர்கள் ஒரு விரும்பிய வகுப்பினருக்கு மட்டுமே அவற்றை மட்டுப்படுத்த முடியும். துரதிர்ஷ்டவசமாக எங்கள் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது தெரிவையே விரும்பினர் - அதன் மூலம் இந்த நாட்டில் வசதி வாய்ப்பு கொண்டவர்கள் மற்றும் வசதி வாய்ப்பற்றவர்களுக்கிடையிலான சமூக இடைவெளியை அவர்கள் பேணினர்.

அதனால், தங்களது மிகவும் பழமைவாத சகோதர சமூகத்தின் வழிமுறைகளிலிருந்து விலகி, தங்களது தர்க்கரீதியான முடிவுகளுக்கமைய தங்களது ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார சுதந்திரங்களை மேற்கொள்வதற்கு போதிய தைரியம் கொண்ட அடிப்படை மற்றும் சிறிய அமைப்புகள் (வன்முறை பக்கம் சாராதவை) மீது நாங்கள் பார்வையைச் செலுத்த வேண்டும். தேசிய அளவில் இலவசக் கல்வியின் தலைவிதி ஓர் உதாரணமாகும். தமிழர் தரப்பில் 1930இல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் தரப்பில் கலாநிதி. ஏ. எம். ஏ. அசீஸ் அவர்களின் வாழக்கைப் பணி என்பவற்றை உதாரணங்களாக நாங்கள் கொண்டுள்ளோம். சிந்தனை மற்றும் நடவடிக்கை சுதந்திரத்தைக் காண்பித்த இரண்டு முன்னணி சிங்கள புலமையாளர்கள் வணக்கத்திற்குரிய பலாங்கொடை ஆனந்த மைத்திரேய மற்றும் கலாநிதி ஈ. டபிள்யு. அதிகாரம் ஆகியோராவர்.

சுதந்திரத்திற்கான அச்சம் அநேகமான சந்தர்ப்பத்தில் "அபேகம" என்ற அடையாளத்தின் கீழ் மறைந்துள்ளதுடன், இந்தப் பாதுகாப்பின்மை குறிப்பாக (ஆனால் முற்றிலுமாகவல்ல) காலனித்துவ காலத்திலிருந்து சிங்கள - பௌத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குறுகிய மற்றும் விரோத நடவடிக்கைகளுக்கு மூல காரணமாக அமைந்துள்ளது. உண்மையில் "அபேகம" என்பது ஒரு செழிப்பான, உள்ளக கலாசார விழு மியத்தைக் குறிப்பிடுகிறது, அது வெளிவாரியான ஒரு அடையாளப் படுத் தலினால் மட்டுப்படுத்தப்படவில்லை. அது சிங்கள கலாசாரப் பாரம்பரியத்தின் ஒரு வெளிப்படுத்தலாகும், ஆனால் எல்லாக் கலாசாரத் திலும் உள்ளது போன்று, அது தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டு, துஷ்பிரயோகிக் கப்பட்டு மற்றும்சுரண்டப்பட்டு விட்டது.


சிங்கள - பௌத்தர்கள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நன்மையை கொண்டாடுவதில் அவசரம் காட்டியதுடன் இலக்கின் வெறுமனே ஓர் அரைப்பகுதியின் அடைதல் மீது தங்களை பலப்படுத்தினர். உண்மையில், எந்தவொரு முன்னேற்றத்திற்கு எதிராக ஓர் உறுதியான உத்தரவாதத்தை அளிப்பதற்காக இந்த அரைப் பகுதி எல்லா அளவுகளிலும் தூக்கி எறியப்பட்டது. இவ்வாறு, இந்த அரைகுறை நிலை (பகுதியளவிலான அடைதலைப் பொறுத்தளவில்) கொண்டாடப்பட்டு மற்றும் அதீத கற்பனையுள் நிலைநாட்டப்பட்டுள்ளது. மைதானத்தின் அரைவாசிப் பகுதி வரை பந்தை எடுத்துச் சென்றபின், மைதானத்தின் முடிவிலுள்ள உண்மையான இலக்கை நோக்கி பந்தை அடிப்பதற்கு நகராது பந்தை வேறு எவரினதும் எட்டுதலுக்கு அப்பால் இட்டு விட்டு, ஒரு செயற்கையான இலக்கை நாம் கட்டமைத்துக் கொண்டு நிற்கிறோம்.

உண்மையில், உரிய இலக்கை அடைவதற்குப் பதிலான ஒரு மலிவான மாற்றீடே இதுவாகும். ஆனால், சுதந்திரத்தை அல்லது நூற்றாண்டுகளாக எது உண்மையானது என்பதை நாங்கள் அறிய வில்லை.

**Sinhalese and their fear of freedom** என்ற தலைப்பில் கிறவுண்ட்விவ்ஸ் தளத்தில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.



**நிச்சயமாக பெரும் அழுத்தம் எதனையும் கொடுக்கும் நிலையில் அமெரிக்கா இல்லை என்பதுவும் இலங்கையுடன் இணைந்து பயணிக்க விரும்புவதையே அலைனாவின் அறிக்கை உணர்த்துகிறது. இதைக் கடந்து ஜெனிவாவில் புதிய தீர்மானம் ஏதும் முன்வைக்கப்பட்டாலும் அதுவும் இலங்கை அரசாங் கத்தின் நகர்வுகளுக்கு இசைவானதாகவே அமைய வாய்ப்புள்ளது.**



# இலங்கையின் இராஜதந்திர நகர்வை முறியடிக்குமா அமெரிக்க அழுத்தம்?

**கே.ரி. கணேசலிங்கம்**

இலங்கை அரசியல் களம் தினம் தினம் நெருக்கடிகளை எதிர்கொள்வதும் அதனை முறியடித்துச் செயல்படுவதையும் இயல்பான ஒரு பொறிமுறையாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் கொரனோவுக்கு எதிரான தடுப்பூசியை பெறுவதில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் மட்டுமன்றி ஜெனிவாவை கையள்வது பொறுத்தும் அமெரிக்க தூதுவரது வெளிப்பாடும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது. இத்தகைய நெருக்கடி ஒவ்வொன்றும் அதிக முரண்பாட்டை உள்நாட்டிலும் பிராந்திய சர்வதேச அரசியலிலும் ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், இலங்கை அரசாங்கம் கடந்த தசாப்தங்கள் முழுவதும் அத்தகைய நெருக்கடியை எதிர்கொண்டு வெற்றிகரமானதாக மாற்றுவதில் பலமான இராஜதந்திரத்ததை வெளிப்படுத்தியிருந்தது. சமகாலத்திலும் எழுந்துள்ள அத்தகைய உத்திகளை இலங்கை ஆட்சியாளர்கள் கையாளுவதில் கரிசனை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி. டெபிலிட்ஸ் அண்மையில் (26.01.2021) தெரிவித்த கருத்தை நோக்குவது பொருத்தமானதாகும்.

இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு அர்த்தமுள்ள திட்டத்துடன் வருமாறு இலங்கையை வலியுறுத்தியுள்ளார். அமெரிக்கா உதவி செய்வதென்பது மிரட்டி அச்சுறுத்துவதல்ல. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா அங்கம் பெறாது விடினும் இலங்கை அளித்த உறுதிமொழியில் வாஷிங்டன் ஆர்வம் கொண்டிருகிறது.

கடந்த ஆண்டு இலங்கை யின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடமிருந்து உள்நாட்டுச் செய்முறை மூலம் விரிவான நல்லிணக்க உபாயம் இருக்கும் எனக் கேட்டபோது மகிழ்ச்சி அடைந்ததாகவும் தெரிவித்தார். மேலும், அவர் தெரிவிக்கும் போது அதில் முன்னேற்றம் காண விரும்புகிறேன். ஏற்கனவே, அளித்த வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்லவும் இடம்பெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையில் ஓர் அர்த்தமுள்ள திட்டத்தை கொண்டுவரவும் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறது. எல்லோரும் எதிர்பார்த்த அர்த்தமுள்ள முன்னேற்றத்தை காணவில்லை என்பதில் ஒருவிதமான கவலை உள்ளது என்றார்.

மேலும், மனித உரிமை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தொடர்பில் அலைனா குறிப்பிடும்போது ஆணைக்குழு மிகவும் திறந்த தன்மையுடனும் சுய பிரதிபலிப்புடனும் இருக்குமென நம்புவதாக தெரிவித்தார்.

எனவே, அலைனாவின் அறிக்கையை வைத்துப் பார்க்கும்போது அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளைப் பார்க்கும் போது கவலையடைவதாகவும் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், ஓரிடத்தில் மட்டும் அர்த்தமுள்ள திட்டத்துடன் ஜெனிவா வாருங்கள் என்ற தொனியில் தெரிவித்துள்ளார் இது சில செய்திகளை மட்டுமே வெளிப்படுத்தியுள்ளது. புதிய தீர்மானத்திற்கான வாய்ப்புப் பற்றிய செய்தியுடன் அமுலாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அந்த செய்தி காணப்படுகிறது.

இதற்கு பதிலளித்த இலங்கை அரசாங்கம் தெரிவித்த கருத்துக்கள் இராஜதந்திர ரீதியானவை. அதிக கோபத்தைக் கொண்டவை. அதனை அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல ஊடாக அறிய முடிகிறது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவை அலுவலகம் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையுடன் இலங்கை அரசாங்கம் முழுமையாக இணங்கப் போவதில்லை எனவும் இலங்கையின் இறைமைக்கு தீங்கு விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் எடுக்க இலங்கை தயாராக இல்லை யுத்தக் குற்றங்கள் தொடர்பாக உள்நாட்டுச் செயல்பாடுகள் மீது நாங்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளோம். என்று குறிப்பிட்டதோடு எதிர்கட்சியின் 30/1 தீர்மானம் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் அதனால் அதிலிருந்து விலகுவதாகவும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக புதிதாக ஆராய்ந்து புதிய செயல்பாடுகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவரது ஊடக அறிக்கையில் முழுமையாக இணங்கப் போவதில்லை என்ற அம்சமும் யுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கும் என்பதுவும் இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளைவிக்கும் எதனையும் அரசாங்கம் ஏற்கப்போவதில்லை என்பதுவும் அரசாங்கத்தின் உள்நாட்டுப் பொறிமுறை மற்றும் சரியான தீர்மானம் எடுக்கப்போவதாக எதிர்பார்த்துள்ளோம் ஆகியன அதிக இராஜதந்திரம் மிக்க சொற்களாவே காணப்படுகிறது. அமெரிக்காவின் புதிய அரசாங்கத்தையும் இலங்கை அரசாங்கத்தையும் ஜெனிவாவையும் பாதிக்காத வகையில் சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இறைமை விடயத்தில் இலங்கை மக்களையும் உலக நாடுகளையும் கையாளுவதில் கரிசனை கொள்ளப்பட்டுள்ளது. இறைமை பற்றி உரையாடுவது அரசாங்கம் மக்களை ஈர்த்துக் கொள்ளும் உத்தியாகவே தெரிகிறது.

இரண்டாவது விடயம் கொரனோவுக்கான தடுப்பூசி இறக்குமதி பற்றிய இந்தியா சீனா சார்ந்த போட்டித் தன்மையும் அதன் அரசியலும் சமகாலத்தில் முக்கியமானதாக விளங்குகிறது. அதிலும் குறிப்பாக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியதற்கு பதிலாகவே இந்தியா தடுப்பூசியை இலவசமாக வழங்க முன்வந்துள்ளதாக பௌத்த தேரரான பத்திரமுல்லே சீலரத்தின ஊடகங்கள் முன் தோன்றி குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். இதனை அடுத்து தடுப்பூசி விவகாரம் அதிக அரசியலாக மாறியது. ஏற்கனவே இலங்கை ஜனாதிபதி சீனாவிடம் தடுப்பூசியை வழங்குமாறு கோரியிருந்தமையும் இந்தியா இலவசமாக முன்வந்தமையும் குழப்பகரமான விடயமாக அமைந்தது. தற்போது சீன தடுப்பு மருந்துகளை அனுப்புவதாக அறிவித்துள்ளது.

இதில், இலங்கை அரசாங்கம் சீனாவை முன்னிறுத்தியே இந்தியாவையும் மேற்குலகத்தையும் கையாண்டு வருகிறது என்பது தெளிவாக தெரியும் ஒரு விடயமாகும். மனித உரிமைகள் முதல் தடுப்பு மருந்து வரை அனைத்தையும் சீனா சார்பான அரசியல் ஒன்றைக் காணமுடிகிறது. அந்த வகையில் அண்மையில் தமிழக மீனவர் நால்வர் இலங்கை கடற்பரப்பில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்தியாவின் அணுகுமுறை சற்று கடினமாகவே அமைந்திருந்தது. அவ்வாறே முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பு விடயமும் அமைந்திருந்தது. அத்தோடு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு துறைமுகத்திலும் கணிசமான பங்கை இந்தியா பெறுவதில் இந்திய வெளியுறவு அமைச்சரது விஜயம் சார்த்தியமான முடிவுகளுக்கு இலங்கை விரைந்து செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே, மேற்கூறிய அனைத்திலும் இந்தியாவின் கை ஓங்கியே இருந்தது. அல்லது அத்தகைய விடயங்களை அடைவதில் கணிசமான நகர்வை இந்தியா சாத்தியப்படுத்தியிருந்தது. அத்தகைய நீட்சியை தடுப்பதற்கு தடுப்பூசியை ஒரு பொறிமுறையாக இலங்கை அரசாங்கம் கையாண்டுள்ளது. அதுவே சீனாவின் பிரசன்னத்தை உடனடியாக அறிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதுவரை காலமும் மௌனமாக இருந்த சீனா இந்தியா இலவசமாக தடுப்பூசியை வழங்க முன்வந்ததை அடுத்து நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்துவிட்டது.

இலங்கை அரசாங்கம் ஜெனிவாவையும் இந்தியாவையும் அமெரிக்காவின் நடவடிக்கைகளையும் கையாளும் அரசியலாக சீனாவை முன்னிறுத்தி வருகின்ற போக்கு தொடர்ச்சியாக அமைந்து வருகிறது. அமெரிக்கா இலங்கை மீது எத்தகைய பொறிமுறையைக் கொண்டிருப்பதென்பது கவனத்தில் கொள்ள வேண்டும். நிச்சயமாக பெரும் அழுத்தம் எதனையும் கொடுக்கும் நிலையில் அமெரிக்கா இல்லை என்பதுவும் இலங்கையுடன் இணைந்து பயணிக்க விரும்புவதையே அலைனாவின் அறிக்கை உணர்த்துகிறது. இதைக் கடந்து ஜெனிவாவில் புதிய தீர்மானம் ஏதும் முன்வைக்கப்பட்டாலும் அதுவும் இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளுக்கு இசைவானதாகவே அமைய வாய்ப்புள்ளது. அதனை கோடிட்டுக் காட்டுவதாகவே அமெரிக்கத் தூதுவரின் அறிக்கை அமைந்திருந்தது. ஆனால், அரசாங்கம் தனது தீர்மானத்திலும் முடிவுகளிலும் உறுதியாகக் காட்டிக் கொள்வது போல் தெரிந்தாலும் சிலவிடயங்களில் உலகத்தோடு ஒத்துழைக்க வேண்டும் எனக் காட்டுவது தற்போதைய சூழலை கடந்து செல்வதற்கான நகர்வாகவே தெரிகிறது.

எனவே, இலங்கை உலக நாடுகளை மிக நுட்பமான கையாளுகைக்குள் கொண்டு செல்கிறது. எல்லாவற்றையும் எதிர்கொள்வதற்குரிய இராஜதந்திர உத்திகளை பிரயோகப்படுத்துகிறது. உள்நாட்டில் அனைத்தாண்மை செயல்பாடுகளை மேற்கொண்டு பயணிக்கும் இலங்கை அரசாங்கம் சர்வதேச மட்டத்திலும் அதனை வெற்றிகரமானதாக மேற்கொள்ள முனைகிறது. இதற்கான நகர்வுகளை இலங்கையை தளமாகக் கொண்டு இயங்கும் சிந்தனை அமைப்புக்கள் செயல்படுகின்றன. குறிப்பாக பாத்பைண்டர் அமைப்பு அண்மையில் இலங்கை - அமெ ரிக்க உரையாடலை ஆரம்பித்துள்ளது. அதன் பிரதான உரையாடல் பங்கேற்பளராக றெபேட் ஓ. பிளேக் அமெ ரிக்காவின் சார்பில் பங்கேற்றுள்ளார். இவ்வாறே ரஷ்யா வையும் சீனா வையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் கையாளும் உத்தியுடன் அத்தகைய சிந்தனை அமைப்புகள் செயல்படுகின்றன.

# இலங்கை இந்தியாவுடன் நட்புறவுடன் செயல்படும்

## என்கிறார் தாரக பாலசூரிய



கொழும்பு,பெப்.08

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர மட்டத்தில் எந்தவித நெருக்கடியும் ஏற்படவில்லை.**

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்ந்து நட்புறவுடன் செயல்படும். மேற்கு முனையம் தொடர்பில் இறுதித் தீர்மானம் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கிய பிறகு இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தம் பிரயோகித்து வருகிறது எனக் கூறப்படும் செய்தி முற்றிலும் பொய்யானது.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சுயாதீனமாகத் தீர்மானங்களை எடுக்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டு.

கிழக்கு முனைய விவகாரத்தால் இந்தியாவுடனான இராஜதந்திர உறவில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்ந்து நட்புறவுடன் செயல்படும்.

மேற்கு முனையம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. பல்வேறு தரப்பினருடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடரை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும்.

சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினர் சமர்ப்பிக்கும் அறிக்கையைக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படும்.

மனித உரிமைகள் பேரவை தொடர்பில் சிவில் அமைப்புக்கள், தமிழ்த் தரப்புக்கள் முன்வைத்த கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

எத்தரப்பினருக்கும் பாதிப்பு இல்லாத வகையில் இம்முறை தீர்மானம் எடுக்கப்படும். நாட்டின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்து அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் இணக்கமாகச் செயல்படும். எத்தரப்பினரையும் பகைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தரப்பினர் முன்வைக்கும் காரணிகள் விரைவில் பகிரங்கப் படுத்தப்படும்- என்றார். (எ)

# இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கொரோனா மரணங்கள் அதிகரிக்கும்

## பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.08

பொறுப்பற்ற நடத்தையால் அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் தொற்று மரணங்கள் மற்றும் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் தற்போதைய நிலைமை மிகவும் பாதுகாப்பானது என்றும் வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் மக்கள் அதிகளவில் நம்புகின்றனர் என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்



சரித்துள்ளார்.

எனவே, கடந்த ஆண்டு டிசெம்பருக்குள் முன்பு செய்ததைப் போல மக்கள் தங்கள் பயணத்தைக் கட்டுப்படுத்தவில்லை.

ஆகையால் அடுத்த இரண்டு வாரங்களில் வைரஸ் பரவுவதில் பெரும் அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# வவுனியாவில் தீயில் எரிந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

வவுனியா,பெப்.08

வவுனியா தெற்கிலுப்பைக் குளம் பகுதியில் தீயில் எரிந்து படுகாயமடைந்த பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந்தப் பெண் கடந்தவாரம் தனது வீட்டிலிருந்த சமயம் தீயில் எரிவதை அவதானித்த அயலவர்கள் அவரை மீட்டு வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர்.

சம்பவத்தில் அமல உட்பவம் (வயது- 37) என்ற இரண்டு பிள்ளைகளின்தாயே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)




# பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான 306 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு,பெப்.08

தொழில்வாய்ப்புக்களுக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு சென்று நாடு திரும்ப முடியாது பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மேலும் 306 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் திட்டத்தின் கீழ் இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

துபாயிலிருந்து இலங்கை எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் -226 என்ற விமானத்தில் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு கட்டுநாயக்கா, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரால் அழைத்தும் செல்லப்பட்டுள்ளனர். (எ)

# வெட்டுக்காயங்களுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் ரத்கமையில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.08

ரத்கமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இருவர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இவ்விரு மரணங்களும் பதிவாகியுள்ளன.

ரத்கமை ரூபிவள பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் குடியிருந்த பெண்ணொருவர் இரத்தக் காயங்களுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்தார் என ரத்கமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

75 வயது பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை ரத்கமை கோவில வத்த பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் வெட்டுக்காயங்களுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நபர் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

34 வயது நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த இரு மரணங்கள் தொடர்பிலும் ரத்கமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# விதிமுறைகளை மீறிய மேலும் 11 பேர் கைது

கொழும்பு,பெப்.08

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் கொரோனா சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத்தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரப்பகுதிக்குள் 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி குற்றச்சாட்டில் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 3,022 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன- என்றார். (எ)

# நல்லிணக்க குழு அங்கத்தவராக செந்தில் தொண்டமான் நியமனம்



கொழும்பு,பெப்.08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய நாட்டின் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க குழுவுக்கு நியமனங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தவிஷேடகுழுவை நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி நியமித்துள்ளார். இவ் அதிஉயர் குழுவில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக உள்வாங்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கான நியமனத்தை நீதியமைச்சர் வழங்கியுள்ளார்.

இலங்கையை பொருத்த வரையில் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவது அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும்.

பல்லினச் சமூகங்களைக் கொண்ட மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் தேசிய நல்லிணக்கமும் தேசிய ஒருமைப்பாடுமே அந்த நாடுகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றுள்ளன.

இதற்கமையவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தக் குழுவை நியமிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அத்துடன் இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக உயர்நிலை பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (எ)

# அரசியல் நாடகங்கள் மூலம் நான் ஜனாதிபதியாகவில்லை

## விமர்சனங்களுக்கு கோட்டாபய பதில்



**கொழும்பு,பெப்.08**

**ஜனாதிபதியான நான் கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது என்றும் இது அரசியல் நாடகம் என்றும் என் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அரசியல் நாடகங்களை அரங்கேற்றியோ அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தோ நான் ஜனாதிபதியாகவில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தெரணியகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதி நேரடியாக கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. இது அரசியல் நாடகமாகும் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல் நாடகங்கள் அரங்கேற்றப்படுவது தேர்தல் காலங்களிலாகும். அதற்கு இன்னும் 4 ஆண்டுகள் உள்ளன.

ஏன் ஜனாதிபதி கிராமங்களுக்குச் செல்கின்றார்? அதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள் அல்லவா? என்று சிலர் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் ஊடாக மக்களின் பிரச்னைகளை அறிந்து கொள்ளும் முறைமையும் உள்ளது. ஆனால் நேரடியாக மக்களைச் சென்று சந்திப்பதே நான் பின்பற்றும் முறைமையாகும்.

கிராமப்புறங்களிலுள்ள அப்பாவி மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதை தவறாகப் புரிந்துகொள்ளவோ அல்லது திரிபுபடுத்தவோ கூடாது.

மனிதாபிமானத்தை மக்களுக்கான வேலைத்திட்டங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். அரசியல் நாடகங்களை அரங்கேற்றி அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து நான் ஜனாதிபதியாகவில்லை. வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் மக்கள் மத்தியில் செல்ல முடியும்- என்றார். (எ)

# மேற்கு முனையத்தின் 85 வீத உரிமத்தை அந்நிய நாட்டுக்கு வழங்க அரசு தீர்மானம்

## தொழிற்சங்கம் கடும் எதிர்ப்பு

கொழும்பு,பெப்.08

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 85 வீத உரிமத்தை அரசாங்கம் பிற நாட்டவருக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. கிழக்கு முனையத்தை பாதுகாக்க முன்னெடுத்த முயற்சியை மேற்கு முனையத்தை பாதுகாக்கவும் தொடருவோம்.

காலி துறைமுகத்தின் 6 ஏக்கர் நிலப்பரப்பை தனியார் நிறுவனத்துக்கு வழங்கும் முயற்சியை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என அகில இலங்கை துறைமுக பொதுச்சேவையாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்தார்.

துறைமுக ஊழியர் சேவையாளர் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட அர சாங்கத்தை அடிபணிய வைத்துள்ளோம்.

கிழக்கு முனையத்தை பாதுகாக்க மேற்கு முனையத்தை அரசாங்கம் பலி கொடுத்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும். கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்ய முடியும் என ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டோம்.

கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபையால் முழுமையாக அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்கான வளம் கிடையாது என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் 10ஆம் மாதம் 22 ஆம் திகதி கிழக்கு முனையத்தின் 49 வீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கான யோசனையை துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவரத்தன அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

தேசிய வளங்களை விற்க மாட்டோம், விற்கப்பட்டுள்ள வளங்களை மீட்டெடுப்போம் என்று குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தேசிய வளங்களை விற்க முனைவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இறுதியில் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அரசாங்கம் தனது தீர்மானத்தை திருத்திக் கொண்டது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 85 சதவீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு 35 வருட காலத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிழக்கு முனையம் கை விட்டு போனதற்கு இந்தியாவும், ஜப்பானும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் பெறுமதியை வெளிநாட்டவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

மேற்கு முனையத்தையும் துறைமுக அதிகார சபையால் அபிவிருத்தி செய்ய முடியும். ஆகவே மேற்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தேசிய வளங்களைப் பாதுகாப்போம் என்று கூறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அனைத்தும் பெயரளவில் மாத்திரமே குறிப்பிட்டுக் கொள்கின்றன.

காலி துறைமுகம் சுற்றுலாத் துறை துறைமுக தளமாகக் காணப்படுகிறது. இத்துறைமுகத்தில் உள்ள 6 ஏக்கர் நிலப்பரப்பு காணியை இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு விற்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதற்கு எதிராகவும் தொழிற்சங்க நடவடிக்கைகளை இனி முன்னெடுப்போம்- என்றார்.

# பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு,பெப்.08

காலி வண்டுரம்பவில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக் கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் பத்தேகம பிரதேசசபையின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது மேலும் இரு ஊழியர்கள் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதேச சபையின் உறுப்பினர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (எ)

# பெரும்பான்மைவாதம் பேரினவாதமாக உருவெடுக்க இடமளிக்க முடியாது

## அரசை எச்சரிக்கின்றார் சுமந்திரன்



கொழும்பு,பெப்.08

தற்போது ஆட்சியில் இருப்பவர்களிடத்தில் காணப்படும் பெரும்பான்மை வாதம் பேரினவாதமாக உருவெடுப்பதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டப் பேரணி மூன்று இனங்களினதும் பங்கேற்பில் தடைகளைக் கடந்து முன் சென்றுகொண்டிருப்பது அரசாங்கத்துக்குத் தெளிவான செய்தியை வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய இன மக்கள் தாமும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் நியாயமான உரிமைகளை வழங்குமாறு கோரியே போராடுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய அரசாங்கம் சிங்கள, பௌத்த பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதாகும். இதன் காரணமாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களிடத்தில் பெரும்பான்மை வாதம் காணப்பட்டே வந்தது. ஆனால் இந்த நிலைமையானது காலப்போக்கில் பேரினவாதமாக உருவெடுக்கும் நிலையை எட்டியிருக்கின்றது.

73ஆவது சுதந்திர தின வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பௌத்த சித்தாந்த நிலைப்பாடுகளையும், ஆட்சிபுரியும் முறைமையையும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார்.

நாட்டின் நிலைமைகளை உணர்ந்து கொள்வதற்கு அவருடைய உரையொன்றே போதுமானதாக உள்ளது. இந்த நாடு பல்லின, சமூக கலாசாரங்களைக் கொண்டதாகும். இங்கு அனைத்து இனக் குழுமங்களுக்கும் சம அந்தஸ்து காணப்பட வேண்டும். அவர்களுக்கான உரிமைகள் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும்.

இதுவே நீண்டகாலமான கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால், ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. குறிப்பாக மலைய மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. அந்த விடயம் தீர்க்கப்படாது அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அதே போன்று முஸ்லிம் சமூகத்தினது ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு பதிலாக வலிந்து தகனம் செய்யப்படுகின்றது. இதனால் அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 7 தசாப்தமாக போராடி வருகின்றார்கள். அவர்களுக்கான நீதியான செயல்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. இந்நிலையில் தான் பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரையில் அஹிம்சைவழியில் எமது பிரச்னைகளை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் கூறுவதற்காக போராட்டப்பேரணியை முன்னெடுப்பதென தீர்மானித்திருந்தோம்- என்றார். (எ)





## ஜெயலலிதாவின் தோழி சசிகலா இன்று சென்னைக்கு வருகிறார்!

சென்னை, பெப். 08

சொத்துக்குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை முடிந்து விடுதலை ஆகியுள்ள அதிமுக முன்னாள் பொது செயலாளர் சசிகாலா, இன்று சென்னை வருவதை ஒட்டி ஜெயலலிதா நினைவிடம், போயஸ் கார்டன் மற்றும் அதிமுக தலைமை அலுவலகம் ஆகிய இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலத்தில் அதிமுகவின் மூத்த அமைச்சர்கள் இரண்டு முறை சசிகலா மற்றும் தினகரன் ஆதரவாளர்களுக்கு எதிராக, தமிழக பொலிஸ் தலைவரிடம் இரண்டு முறை முறைப்பாடு அளித்துள்ளனர். அதேநேரம், சசிகலாவின் ஆதரவாளர்கள் பெங்களூரு முதல் சென்னை வரை பல இடங்களில் பதாகைகள் வைத்துள்ளனர்.

சுமார் 50 இடங்களில் வி.கே.சசிகலாவுக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்துள்ளதாக அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் கட்சியினர் கூறுகின்றனர். அந்த வரவேற்பு நிகழ்வில் சமீபத்தில் அதிமுகவில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் இடம்பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

சசிகலா அ.தி.மு.க. கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்தால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ள அதிமுக அமைச்சர் ஜெயக்குமார், சசிகலாவின் வருகையால் அதிமுகவில் எந்த மாற்றமும் நிகழாது என தெரிவித்துள்ளார்.

“அதிமுக மிகப்பெரிய இயக்கம். கொசு, ஈக்கெல்லாம் பயப்படுபவர்கள் நாங்கள் கிடையாது. அவரது வருகையால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை,”என ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில், அ.தி.மு.க அமைச்சர்கள் டி.ஜி.பியிடம் முறைப்பாடு அளித்துள்ளது தொடர்பாக பேசிய அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன், ஆட்சி, அதிகாரத்தை வைத்துக் கொண்டு அமைச்சர்கள் எதற்காக பயப்படுகிறார்கள் எனத் தெரியவில்லை என விமர்சித்துள்ளார்.

சசிகலாவின் வருகையால் அ.தி.முகவினர் பதற்றமடைந்துள்ளனரா என மூத்த பத்திரிகையாளர் ராதா கிருஷ்ணனிடம் கேட்டபோது,

“அ.தி.மு.க அலுவலகத்தை சுற்றியும் பொலிஸார் இருக்கிறார்கள். பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தகைய ஏற்பாடு தேவையா எனத் தெரியவில்லை. கட்சியின் முழு பொறுப்பையும் உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி பெற்றிருக்கின்றனர். கட்சியின் சின்னமும் இவர்களுக்குத்தான் என தீர்ப்பு இருக்கிறது. சசிகலா சட்டமன்ற தேர்தலில் போட்டியிடப்போவதில்லை. இதுபோல தங்களுக்குச் சாதகமான பல வாய்ப்புகள் இருந்தபோதும் அதிமுகவில் இத்தகைய சலசலப்பு ஏற்பட்டுள்ளது வியக்கவைக்கிறது,” என்கிறார்.

மேலும், 2021 சட்டமன்ற தேர்தலில் வாய்ப்பு கிடைக்காதவர்கள் சசிகலாவுடன் இணைய வாய்ப்புள்ளது என்பதால், சசிகலா பற்றி வெளிப்படையாக விமர்சிக்க முடியாத நிலையிலும் சிலர் இருக்கிறார்கள் என்கிறார் ராதாகிருஷ்ணன்.

‘ தற்போது எம்.எல்.ஏ மற்றும் அமைச்சர்களாக இருக்கும் பலருக்கும் சீட் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். அதனால், வி.கே.சசிகலா வருகை அதிமுகவினர் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது உறுதி. ஆனால் ஆளும் கட்சியாக இருக்கும் அதிமுகவின் மூத்த அமைச்சர்கள் பாதுகாப்பு பற்றி டி.ஜி.பியிடம் மனுகொடுக்கிறார்கள், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்பதெல்லாம் வியப்பைத் தருகிறது,” என்கிறார் அவர்.

# பிரான்ஸில் காஸ் வெடிப்பு!

## பலர் காயம், ஒருவரை காணோம்

பாரிஸ், பெப். 08

பிரான்ஸின் போர்தோ நகரின் மத்தியில் நேற்றுமுன்தினம் காலை கேட்ட பெரும் வெடியோசை பலரையும் படுக்கையில் இருந்து எழுந்தோட வைத்துள்ளது.என்ன நடந்தது என்பது தெரியாமல் பலரும் தெருவுக்கு ஓடினர்.

பிரான்ஸின் தென் மேற்குத் துறைமுக நகரமான போர்தோவில் குடியிருப்பு நெரிசல் மிகுந்த பகுதியில் கட்டடம் ஒன்றின் வாகனத் தரிப்பிடத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனால் எழுந்த ஓசை நகரை உலுக்கியது.

சமையல் எரிவாயுவுடன் தொடர்புபட்ட வெடிப்புச் சம்பவம் அது என்று ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவித்தன.

எரிவாயு விநியோக இணைப்பிலா அல்லது வேறு தனிநபரது தவறினாலா வெடிப்பு நிகழ்ந்தது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அந்தப் பகுதியில் கட்டடங்களின் கண்ணாடி ஜன்னல்கள்



சிதறின. கூரைகள் பறந்தன. 89 வயதான ஒருவர் பலத்த காயம் அடைந்துள்ளார். வேறு பத்துப்பேர் வரை சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

காணாமற்போனதாகக் கருதப்பட்ட வயோதிபப் பெண் ஒருவரது சடலம் பின்னர் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டது.

வெடிப்பின் அதிர்வினால் அயலில் கட்டடங்கள் இடிந்து விழக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதால் பலர் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.



## இந்தோனேசியாவில் சிவப்பு நிறத்தில் கிராமத்தை சூழ்ந்துள்ளது வெள்ளம்!

ஜகார்த்தா, பெப். 08

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பெய்த கடும் மழையை அடுத்து ஜெங்கோட் என்ற கிராமத்தை இரத்தச் சிவப்பான நிறத்தில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

இங்குள்ள ஆடைத் தொழிற்சாலையின் சாயப் பட்டறைக்குள் வெள்ளம் புகுந்ததால் க்ரிம்சன் என்ற சிவப்பு நிறச் சாயம் வெள்ள நீரில் கலந்து கிராமம் முழுவதும் வெள்ளம் சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

கிராமத்தை சிவப்பு நிற வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் ஆயிரக்கணக்கானவர்கள் இதனைப் படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தோனேசியாவின் பெகலோங்கனில் இருக்கும் சில நதிகள் இதற்கு முன்பும் சில தடவைகள் சிவப்பு நிறமாக மாறியுள்ளன. தொழிற்சாலை சாயம் வெள்ள நீருடன் கலந்ததால் இந்த நிறமாற்றம் ஏற்பட்டது.

கடந்த மாதம் இந்தோனேசியாவில் உள்ள வேறு ஒரு கிராமத்தின் சாயப்பட்டறைக் கழிவுகள் வெள்ள நீருடன் கலந்ததால் அங்கு பச்சை நிறத்தில் வெள்ளம் ஓடியது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் இந்தோனேசிய தலை நகரான ஜகார்தாவில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 43 பேர் உயிரிழந்ததமையும் குறிப்பிடத்தக்கது.

## யாங்கூனில் 2ஆவது நாள் தொடந்தது போராட்டம்!

### இணையச் சேவையை முடக்கம்

யாங்கூன், பெப். 08

மியன்மாரின் முக்கிய நகரமான யாங்கூனில் இரண்டாவது நாளாக ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கூடி, ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றி ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், ஜனநாயகம் கிடைக்கும் வரை தங்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் யாங்கூன் பல்கலைக்கழகத்திற்கு அருகே உள்ள வீதிகளில் பொலிஸார் மற்றும் கலகத்தை கட்டுப்படுத்தும் அதிகாரிகள் குவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை ருவிட்டர், இன்ஸ்ராகிராம் பக்கங்களுக்கு இராணுவம் தடை விதித்த சில மணி நேரத்தில் இணையச் சேவையும் முடக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கவும், ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ அரசாங்கம் தெரிவித்துள்ளது.



## இறந்த தாயின் சடலத்துடன் பல வாரங்கள் வசித்த மகன்!

பாரிஸ், பெப். 08

வீட்டில் உயிரிழந்த தனது வயோதிபத் தாயாரது சடலத்துடன் பல வாரங்கள் வசித்துவந்த நபர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பாரிஸ் புறநகரான வில்நுவ்- சென்- ஜோர்ஜெஸ் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் கொடுத்த தகவலை அடுத்தே சிறிய மாடிக் கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் அமைந்திருந்த வீட்டை சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்து 92 வயதான மூதாட்டியின் சடலத்தை மீட்டனர்.

அப் பெண் உயிரிழந்து பல வாரங்கள் கடந்திருக்கலாம் என்று சடலத்தை அழுகிய நிலையில் மீட்டெடுத்த பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டிலேயே வசித்து வந்த அவரது மகனான 57 வயது ஆண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரது நடத்தைகள் மனநலம் பாதிக்கப்பட்டவர் போன்று காணப்பட்டதால் பின்னர் அவர் சமூகநல சேவைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் நடந்த வீடு நீதி விசாரணைகளுக்காக சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.




# அஸ்டன் வில்லாவிடம் தோற்றது ஆர்சனல்

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோல்வியடைந்தது.

அஸ்டன் வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஒலி வட்கின்ஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியிருந்தது. யுனைட்டெட் சார்பாக எடின்சன் கவானி, புரூனோ பெர்ணான்டஸ், ஸ்கொட் மக்டொமினி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாக, அப்துல்லாயி டுக்கோரே, ஜேம்ஸ் றொட்றிகாஸ், டொமினிக் கல்வேர்ட்-லூயின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# 578 ஓட்டங்களை குவித்தது இங்கிலாந்து!

இந்தியா அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து அணி 578 ஓட்டங்களை குவித்துள்ளது.

4 டெஸ்ட் போட்டி, 4 இருபதுக்கு - 20 போட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாட இங்கிலாந்து அணி இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி சென்னை சிதம்பரம் மைதானத்தில் கடந்த வெள்ளி ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து களமிறங்கியது.

அதன்படி போட்டியின் மூன்றாவது நாள் ஆரம்பத்தில் இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 578 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக அணித்தலைவர் ஜோ ரூட் 218 ஓட்டங்களையும் சிப்லி 87 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 82 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பும்ரா மற்றும் அஷ்வின் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்த நதீம் மற்றும் இஷாந்த் ஷர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இந்நிலையில் இந்தியா அணி தனது முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வருகின்றது.






# மூன்றாவது டெஸ்டில் முகமட் ஷமி

இந்தியாவின் முகமட் ஷமி, இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 2 டெஸ்டில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய வேகப்பந்துவீச்சாளர் முகமட் ஷமி. சமீபத்தில் நடந்த அடிலெய்ட் டெஸ்டில் துடுப்பெடுத்தாடிய போது அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பாட் கம்மின்ஸ் வீசிய பந்து தாக்கியதில் இவரது வலது மணிக்கட்டுப் பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் தொடரில் இருந்து பாதியில் விலகிய இவர், நாடு திரும்பினார். அதன்பின் பெங்களூரில் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் மறுவாழ்வு பயிற்சியில் பங்கேற்று வரும் ஷமி, இங்கிலாந்துக்கு எதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிக்கு தேர்வு செய்யப்படவில்லை.

இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்ட ஷமி, பந்து வீச்சு பயிற்சியை ஆரம்பித்தார். இவர், சகவீரர் நவ்தீப் சைனியுடன் இணைந்து பந்துவீச்சுப் பயிற்சி மேற்கொண்ட வீடியோவை தனது ‘ருவிட்டரில்’ பதிவிட்டிருந்தார். அடுத்த சில நாட்களுக்கு பந்துவீச்சு பயிற்சியை தொடர்வார் என்று கூறப்படுகிறது. இதனால் இவர், அகமதாபாத்தில் நடக்கவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 2 டெஸ்டில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் பெப்ரவரி 24 இல் தொடங்கும் 3ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன் ஷமி, தனது உடற்தகுதியை நிரூபிக்கும் பட்சத்தில் அணியில் இடம் பிடிக்கலாம்.

# பிக்பாஷ் லீக்கில் மீண்டும் சம்பியனான சிட்னி சிக்சர்ஸ்



அவுஸ்திரேலிய, பிக்பாஷ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சிட்னி சிக்சர்ஸ் மீண்டும் சம்பியன் ஆகியுள்ளது.

பிக்பாஷ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது.

8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டி தொடரில் சிட்னியில் நேற்று முன் தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் சிட்னி சிக்சர்ஸ், முன்னாள் சம்பியனான பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியை சந்தித்தது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிட்னி சிக்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 188 ஓட்டங்களை குவித்தது.

அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரரர் ஜேம்ஸ் வின்ஸ் 60 பந்துகளில் 10 பவுண்டரி, 3 சிக்சருடன் 95 ஓட்டங்களை சேர்த்து ஆட்டம் இழந்தார்.

பின்னர் 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 161 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதனால் சிட்னி சிக்சர்ஸ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மீண்டும் சாம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

சிட்னி சிக்சர்ஸ் அணி வீரர்கள் ஜேம்ஸ் வின்ஸ் ஆட்டநாயகன் விருதையும், ஜோஷ் பிலிப் தொடர் நாயகன் விருதையும் கைப்பற்றினார்கள்.

# இந்திய - இலங்கை உறவில் விரிசல் சீனா திரைமறைவில் சதி நடவடிக்கை



## ஜெனிவாவில் எதிரொலிக்கும் என்கிறார் கேணல் ஹரிகரன்

கொழும்பு,பெப்.08

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய செயல்படுவதற்கு ராஜபக்ஷவினரின் அரசாங்கம் மறுதலிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டமைக்கு சீனா, தொழிற்சங்கங்களின் பின்னணியிலிருந்து செயல்பட்டமையே காரணம் என இந்திய இராணுவத்தின் ஓய்வுநிலை புலனாய்வு நிபுணரும் தெற்காசியாவில் பயங்கரவாதம் மற்றும் கிளர்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நீண்ட அனுபவம் வாய்ந்தவர்களுள் ஒருவருமான எழுத்தாளர் கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையமானது இந்தியா, ஜப்பான் கூட்டில் பொது - தனியார் அபிவிருத்தி முயற்சிக்கு கையளிக்கப்படாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தின் தீர்மானத்தை பகிரங்கமாக அறிவித்துள்ளமை தொடர்பிலும் அதன் எதிர்கால விளைவுகள் தொடர்பிலும் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் விரிவாக்கப் பணியை முன்னெடுப்பதற்கான இந்திய, ஜப்பான் கூட்டு முயற்சியின் உதவியை நிராகரித்து சுயமாகவே செய்வதாக முடிவெடுத்திருப்பது இலங்கையின் நீண்ட நாள் நட்பு நாடான இந்தியாவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய - ஜப்பான் உதவியுடன் தான் கிழக்கு முனையத்தின் விரிவாக்க முயற்சியை இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் முன்னெடுப்பதற்கு உத்தேசித்து இருப்பதாக இலங்கை துறைமுக தொழிற்சங்க தலைவர்களுடனான சந்திப்பின்போது கூறியிருந்தார்.

ஆனாலும், ஆளும் கட்சியினது அரசியல் காரணங்களுக்காக கிழக்கு முனையத்தை ஏற்கனவே கூறியவாறு வழங்க முடியாது என்று எடுத்துள்ள அந்த முடிவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கட்சியின் மீதுள்ள ஆளுமைக் குறைவை காட்டுகிறது. ஜனாதிபதியின் இந்தக் குறைபாட்டை இந்தியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் நன்கு புரிந்து கொண்டிருக்கும். ஆகவே அவை நேரடியாக ஜனாதிபதி மீது அழுத்தம் காட்டமாட்டார்கள் என்பது என் அனுமானமாகமாகவுள்ளது. ஏனெனில் ஜனாதிபதி ஏற்கனவே இந்தியாவின் பாது காப்புக்கு இலங்கை அரசாங்கம் எந்த வகையிலும் உதவாது என்பதை பல தடவைகளில் கூறியுள்ளமையினாலாகும்.

இலங்கை அரசாங்கத்தின் முடிவு மாற்றப்பட்டமைக்கு சீனாவே சூத்திரதாரியாக உள்ளது. அது இலங்கை தொழிற்சங்கங்களின் வழியாக செயல்பட்டுள்ளது. இதில் எவ்விதமான ஐயங்களுமில்லை.

கிழக்கு முனையம் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்படாமையானது இந்தியா, ஜப்பான் ஆகியவற்றுக்கு மட்டுமல்லாது இந்திய - பசுபிக் பாதுகாப்பு அமைப்பில் உள்ள அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கும் கவலை தரும் விடயமாகும். ஏனெனில் இந்த இரண்டு நாடுகளும் இலங்கைத் துறைமுகத்தை அதிகமாக உபயோகிக்கும் நாடுகளில் முக்கியமானவையாக உள்ளன. ஆகவே இலங்கை அரசாங்கத்தின் இந்த முரணகை முடிவால் ஏற்படும் எதிர்விளைவுகளை அந்நாடுகளின் கடல்சார் வணிக ரீதியான விடயங்களின் மூலம் எதிர்காலத்தில் முகங்கொடுக்க நேரலாம்.

தமிழகத்தில் அவ்விதமாக நிலைமைகள் ஏற்படுகின்றபோது இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய மீதான நம்பிக்கையைக் குலைக்கும். அவ்விதமான நிலைமையானது ஜெனிவாவில் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிரொலிக்கும். ஆகவே நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் அவ்விதமான நிலைமைகள் ஏற்படுகின்றபோது இந்திய - இலங்கை உறவுகளில் காழ்ப்புணர்ச்சிகள் ஏற்படலாம்- என்றார். (எ)




## போலி விசாக்களை பயன்படுத்தி நேற்று ஜேர்மன் செல்ல முற்பட்ட மூவர் கைது

கொழும்பு,பெப்.08

போலி விசாக்களைப் பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழியாக ஜேர்மனிக்கு தப்பிச்செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுதிணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 34 வயது தாயொருவரும், அவரது 9 வயது மகனும், வவுனியா பகுதியைச் சேர்ந்த 34 வயது நபருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஈ.கே.-651 என்ற எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் மூலம் டுபாய் நோக்கிப் புறப்பட முற்படுகையிலேயே இவர்கள் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் உள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

## மருதபாண்டி ரமேஸ்வரனுக்கு பிணை

ஹற்றன்,பெப்.08

கந்தப்பளை பார்க் தோட்ட விவகாரம் தொடர்பில் நுவரெலியா நீதிமன்றத்தில் கடந்த 03 ஆம் திகதி மாலை ஆஜரான நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரனை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

அத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கந்தப்பளை பார்க் தோட்ட அதிகாரிக்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் உதவி தோட்ட அதிகாரியொருவரைத் தாக்கியமை, சேதம் விளைவித்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கந்தப்பளை பொலிஸார் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அதேநேரத்தில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற வகையில் நீதிமன்றத்தில் முன்னிலையானோரில் மூவர் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நுவரெலியா பிரதேச சபை தவிசாளர், அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர், நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட 12 பேருக்கு ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. (எ)

## வவுனியாவில் நெல் தளம் அமைக்குமாறு கோரிக்கை

வவுனியா,பெப்.08

வடக்கில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் நெல்லை வீதியில் காயப்போடும் விவசாயிகள் நெல் தளம் அமைத்துத்தருமாறுகோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல் அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில் பொதுமக்கள் நெல் தளம் இன்றி பிரதான வீதிகளில் நெல்லை காயவைத்து வரும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. தமக்கு நெல் தளம் இன்மையாலேயே தாங்கள் பிரதான வீதிகளில் காயவைத்து வருவதாகவும் தமக்கு நெல் தளம் அமைத்துத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட நெல்களை நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு போன்ற பிரதான வீதிகளில் காயவைத்து வருகின்றனர். (எ)

# தமிழர் எழுச்சி பேரணி யாழில் பதித்த தடங்கள்

















ஈழநாடு
Eelanadu

# அடிப்படைவாதத்தை ஒழிக்க முஸ்லிம்களுக்கு உதவுவேன்

## ஞானசார தேரர் திட்டவட்டம்



காலி,பெப்.08

**அடிப்படைவாதிகளின் செயல் பாடுகளை ஒழிப்பதற்கு முஸ்லிம் மக்கள் முன்னெடுக்கும் செயல் பாடுகளுக்கு தான் முழுமையான ஆதரவை வழங்கத் தயார் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச் சியொன்றில் கலந்து கொண்டு 20 இலட் சம் ரூபா பரிசு பெற்ற பாடசாலை மாணவி ஷூக்ராவை நேற்று நேரில் சென்று சந்தித்து வாழ்த்துக்கூறிய பின் னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காலி பிரதேசத்துக்கு சென்ற அவருக்கு அப்பிரதேச முஸ்லிம் மக்களால் வரவேற்பளிக்கப்பட்டுள் ளது. இதன்போது அவர் மாணவி ஷூக்ராவின் வீட்டுக்குச் சென்றுள் ளார். இதன்பின்னர் அடிப்படை வாதிகளின் செயல்பாடுகளை ஒழிப்பதற்கு முஸ்லிம் மக்கள் முன் னெடுக்கும் செயல்பாடுகளுக்கு தான் முழுமையான ஆதரவை வழங் குவதாகவும், அடிப்படைவாதிக ளின் நோக்கங்களை நிறைவேற்று வது தேசத்துரோகம், அவ்வாறான நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

# திருமணத்துக்கு சென்ற 8 பேருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.08

மொரவக்க, பிட்டபெத்தர பிரதேசத்தில் திருமண நிகழ்வொன்றுக்கு சென்ற 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

பிட்டபெத்தர பிரதேசத்தில் திருமண மண்டபம் ஒன்றில் 4 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்ட கார ணத்தால் இந்த மண்டபத்தில் இடம்பெற்ற திருமண வைபவங்களில் கலந்து கொண்ட தரப்பினர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதன்போது மணமகனும் தொற்றாளராக இனங்காணப் பட்டுள்ளார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ)

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 807 பேர் பூரண குணம்

கொழும்பு,பெப்.08

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 807 பேர் பூரண குணமடைந்து நேற்று வீடுக ளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

இதனையடுத்து கொரோனா தொற்றிலிருந்து குண மடைந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 401 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 576ஆக பதிவாகி யுள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயி ரிழந்தோர் எண்ணிக்கை 350ஐ தாண்டியுள்ளது. (எ)

அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

16655 | வே | 1989
மானிப்பாய் | இந்து
Accountant | Australia
விசாகம்(துலாம்) | 178செ.மீ

16772 | வே | 1987
சுந்தரோடை | இந்து | லக் : செவ்
Driver | சதயம்(கும்பம்)
Sri Lanka | 168செ.மீ

15883 | மு | 1976
Divorced | மல்லாவியா | இந்து
Coordinator | Qatar
பூசம்(கடகம்) | 171செ.மீ

13291 | வே | 1987
சாவகச்சேரி | இந்து | ஆ.செவ் : 11
ICT Officer | Sri Lanka |
பூரட்டாதி(கும்பம்) | 170செ.மீ

13354 | வே | 1987
யாழ்நகரம் | இந்து | Sri Lanka |
Credit Officer | ஆ.செவ் : 03
மிருகசீரிடம்(மிதுனம்) | 175செ.மீ

மணமகள் விபரம்

14006 | வே | 1990
யாழ்நகரம் | இந்து
optometrist | Australia
மகம்(சிம்மம்) | 158செ.மீ

13948 | வே | 1991
புங்குடுதீவு | இந்து | Sri Lanka |
N/A | ஆயில்யம் (கடகம்)
162செ.மீ | செவ் : 08

13439 | வி | 1991
மாவிட்டபுரம் | இந்து | சைவம்
Finance Officer | Sri Lanka
மூலம்(தனசு) | 170செ.மீ | செவ் : 08

12950 | வே | 1991
யாழ்நகரம் | இந்து |
N/A | France | செவ் : 12
கார்த்திகை(மேடம்) | 167செ.மீ

12860 | வே | 1991
யாழ்நகரம் | இந்து | செவ் : 12
Staff Assistant | Sri lanka |
விசாகம்(துலாம்) | 160செ.மீ

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# பதுளையில் ஒரே நாளில் 197 பேருக்கு கொரோனா

பதுளை,பெப்.08

பதுளை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்க ளின் எண்ணிக்கை 200ஐ அண்மித் துள்ளது. நேற்று முன்தினம் 197 கொரோனா தொற்றாளர்கள் பதுளை மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் என கொரோனா பரவல் தடுப்புச் செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் மேல் மாகா ணத்தை தவிர்ந்த வெளி மாவட்டம் ஒன்றில் அதி களவானதொற்றாளர்கள் பதிவான முதல் சந்தர்ப் பம் இதுவாகும்.

பதுளை மாவட்டத்தில் பதி வாகியுள்ள தொற்றாளர்களில் 185 பேர் ரிதீமாலியத்த பிரதேசத்தின் தொழிற்சாலையொன்றின் ஊழி யர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுக் காலை 06 மணியுடன் முடிவடைந்த 24 மணித் தியாலங்களில் வைரஸ் தொற்றுக் குள்ளான மேலும் 726 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் களின் எண்ணிக்கை 68 ஆயிரத்து 576 ஆக அதிகரித்துள்ளது என கொரோனா பரவல் தடுப்புச் செயல் பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு மாவட் டத்தைச் சேர்ந்த 116 பேரும், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 197 பேரும், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 101 பேரும், கண்டி மாவட்டத்தை சேர்ந்த 63 பேரும், குருநாகல் மாவட் டத்தைச் சேர்ந்த 88 பேரும், களுத் துறை மாவட்டத்தைச் சேர்ந்த 51 பேரும் மற்றும் மாத்தறை மாவட் டத்தைச் சேர்ந்த 22 பேரும் அடங் குவதாக கொரோனா பரவல் தடுப் புச் செயல்பாட்டு மையம் தெரிவித் துள்ளது. (எ)

# வெளிநாட்டுத் துப்பாக்கி, கைக்குண்டுடன் மூன்று பேர் கைது: ஒருவர் தப்பியோட்டம்



கொழும்பு,பெப்.08

கொழும்பு கடவத்தை, பத வியா மற்றும் தெரணியகல ஆகிய பிரதேசங்களில் பொலி ஸாரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போது கைக்குண்டு, வெளி நாட்டில் தயாரிக்கப்படும் துப் பாக்கி உள்ளிட்டவற்றுடன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதோடு ஒருவர் தப்பி யோடியுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடவத்தை பிரதேசத்தில் கைக்குண்டுடன் சந்தேகநப ரொருவர் கைது செய்யப்பட் டுள்ளார். கடவத்தை வீதிக்கு அருகில் இவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

இதேவேளை, பதவியா பொலி ஸாரால் மோட்டார் சைக்கி ளொன்று சோதனைக்குட்படுத் தப்பட்ட போது, அதில் பய ணித்த நபர்களிடமிருந்து வெளி நாட்டு தயாரிப்பு துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத் தும் துப்பாக்கி ரவைகள் 7 கைப் பற்றப்பட்டுள்ளன. இதன்போது சந்தேக நபரொருவர் கைது செய் யப்பட்டார். அத்தோடு மற்றைய சந்தேகநபர் தப்பிச்சென்றுள் ளார். இவர்கள் இருவரும் வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அத்தோடு தெரணியகல பிர தேசத்தில் சீதாவாக்கை குற்றத் தடுப்புப் பிரிவினரால் முன்னெ டுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் போர- 12 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைக்குண்டு மற் றும் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் களை நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

இவை தொடர்பில் கட வத்தை, பதவியா மற்றும் தெர ணியகல பொலிஸாரால் மேல திக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

துப்பாக்கிகள் மற்றும் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தயாரிப்பு வெடிமருந்துகள் என்பவற்றை உடைமையில் வைத்திருப்பது குற்றமாகும். குற்றத்தடுப்புப் பிரிவினர் மூலம் இது போன்ற சுற்றிவளைப்புக் களை தொடர்ந்து முன்னெ டுக்க பொலிஸார் திட்டமிட் டுள்ளனர்.

ஒரு புறம் கொரோனா கட்டுப் பாட்டு செயல்பாடுகளில் பொலி ஸார் ஈடுபட்டுள்ள போதிலும் சுற்றிவளைப்புக்கள், சோதனை நடவடிக்கைகள் என்பன வழ மையைப் போன்றே முன்னெ டுக்கப்படும்- என்றார். (எ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒருதிருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவிலலீசன்
6.35 மணி : மதம் சார்பானநற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையபலன்
வழங்குபவர் : சைவசித்தாந்தபண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருமதிகோகிலாமகேந்திரன்
உளவளத் துணையாளர்
7.15 மணி : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,நல்லூர்
ஆசிரியஆரோசகர்,யாழ்ப்பாணகல்விவலயம்
7.20 மணி :சித்தமருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றையபத்திரிகைகளில்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை (நேரலை)
10.30 மணி :தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி :சிரிக்கலாம் வாங்க

**பகல்**
1.00 மணி :அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி :சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி :குட்டீஸ் தர்பார்-நேரலை



5.30 மணி :குறுந்திரைநேரம்
6.00 மணி :சினிமாசினிமா

**இரவு**
7.00 மணி :சொற்சமர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :சாட்சியம்
9.30 மணி : நலந்தானா



10.00 மணி :யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
சுத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள் கணிதம்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி :சுப்ரபாதம்
07.00 மணி :இன்றைய சிந்தனை
07.05 மணி :இன்றைய நாள்
07.20 மணி :சின்மய சிந்தனை
07.30 மணி :மங்கள இசை
08.00 மணி :அருளுரை
08.30 மணி :திருவாசகம்
09.00 மணி :யாழ்ப்பாணம் மருதனார்மடம்
ஆஞ்சநேயர் கோவில் திருவிழா
10.00 மணி :ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி :பஜனை
11.00 பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி
விநாயகர் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி :அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் மருதனார்மடம்
ஆஞ்சநேயர் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2021 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.